# ஆண்டறிக்கை
# 2013



அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

**45** வருடகால பணியினை நிறைவேற்றியவாறு அர்ப்பணிப்பு, நிபுணத்தவம், கடும் முயற்சி, ஆக்கத்திறன், பேரார்வம் ஆகியவற்றால் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. கடந்து வந்த பாதையினை திரும்பிப் பார்க்கையில் உண்மையிலேயே பெருமகிழ்ச்சியாக உள்ளது. அது குறித்து பெருமிதங் கொள்கின்றோம். எனினும், ஓயாமல் பயணத்தைத் தொடர்கின்றோம். எமது கதை நாளைய நீண்ட பயணத்திற்கான ஆரம்பமாகும்.



**45** years of commitment, proficiency, perseverance, creativity and passion has placed the State Timber Corporation at the forefront. We are really pleased and proud to look back our voyage of success. Yet, we will not rest and our story is far from over.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| ஆரம்பமும் இன்றும் | 03 |
| நாங்கள் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஆவோம் | 04 |
| எமது எதிர்காலம் | 05 |
| நிதிக்கூற்றுக்களின் முக்கிய பதிவுகள் | 07 |
| நிறுவனத் தகவல்கள் | 08 |
| முகாமைத்துவக் குழு | 09-10 |
| தலைவரின் மீளாய்வு | 11 |
| பொது முகாமையாளரின் மீளாய்வு | 12 |
| எமது பொறுப்புக்கள் | 13 |
| எமது வர்த்தகப் பெறுமானங்கள் | 14 |
| பணிப்பாளர் சபை | 15 |
| சிரேஷ்ட முகாமைத்துவக் குழு | 16-17 |
| பணிப்பாளர் சபை மீளாய்வு | 18-26 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டியின் அறிக்கை | 27 |
| வியாபார நடவடிக்கைகளின் சுருக்கம் | 28-35 |
| நீடித்த உறுதிப்பாட்டு அறிக்கை | 36-42 |
| சன்மானங்களும் விசேட விருதுகளும் | 43 |
| இடர் முகாமைத்துவம் | 44-49 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 50-66 |
| வருடாந்த கணக்குகள் | 67-71 |
| கணக்குகளுக்கான குறிப்புக்கள் | 72-86 |
| நிதிக் கலைச் சொற்கள் | 87 |

## ஆரம்பம்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரசாங்கத்திற்குரிய வர்த்த நிறுவனமொன்றாகும். அது 1968ஆம் அண்டில் காணி, நீர்ப்பாசன மற்றும் மின்வலு அமைச்சரினால் 1957இன் இல 49ஐக் கொண்ட அரசாங்கக் கைத்தொழல் கூட்டுத்தாபன சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்டதுடன், 1982 பெப்ரவரி மாதம் 05 ஆந் திகதிய இல 178.˙.10ஐக் கொண்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2009ஆம் ஈண்டு யூன் 26ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் மேலும் திருத்தப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டது. ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆரம்ப மூலதனம் 2.5 மில்லியன் ரூபாவாகும்.

## இன்று

அதன் தலைமை அலுவலகம் பத்தரமுல்லை, “சம்பத்பாயா” வில் அமைந்துள்ளதுடன், பிராந்திய அலகுகள் நாட்டின் எல்லா பிரதேசங்களிலும் அமைந்துள்ளன. அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் முக்கிய வருமான மூலமானது அரிமரம் மற்றும் மர உற்பத்திகள் ஆகியவற்றின் விற்பனையாவதுடன், வளம்மிகு அறுவடைக்காக அரசாங்க மரக்கூட்டுத்தாபனம், வன பாதுகாப்பு திணைக்களத்துடன் இணைந்து வளம்மிகு வன நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துகின்றது.

அதி உயர் தரத்தில் மர உற்பத்திகளையும் சிறந்த சேவையினையும் வழங்குவதற்கு நாம் எப்போதும் முயற்சிப்பதுடன், 45 வருட காரமாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரிமரம் மற்றும் மர உற்பத்தித் துறையில் உயர்ந்த நிலையினை அடைவதற்கு இது காரணமாக அமைந்ததுடன், உயர் தர உற்பத்திகளை மதிப்பீடு செய்கையில் எமது உற்பத்திகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் அங்கமாக பாவனையில் உள்ளது.

- ✔ நாம் தரம் மிக்கவர்களாவோம்.
- ✔ நாம் பாதுகாப்பு மிக்கவர்களாவோம்.
- ✔ நாங்கள் பொறுப்பு மிக்கவர்களாவோம்.
- ✔ நாம் வாடிக்கையாளரை இலக்காகக் கொண்டுள்ளோம்.
- ✔ நாம் அரசாங்க பிரிவிற்கு உரியவராவோம்.

நாங்கள் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஆவோம்.



# எமது எதிர்காலம்

## நோக்கு

நாட்டின நம்பிக்கையை வென்ற பெறுமதிமிக்க அரிமரம் மற்றும் மரத்தாலான பொருட்களை வழங்குவோனாக இருத்தல் மற்றும் அரிமரச் சந்தையில் தலைமைத்துவத்தைப் பெறல்.

## பணி

எம்மிடமுள்ள தொழினுட்ப அறிவு,புகழ், தேர்ச்சி ஆகியவற்றைப் பயன்படுத்தி சட்டரீதியாக சூழல் நேயமிக்க வகையில் நாட்டின் தேவைக்கேற்ப எமது வாடிக்கையாளரின் அரிமர மற்றும் மரத்தாலான பொருட்களுக்கான கேள்வியைப் பூர்த்தி செய்யும் விதத்தில் உற்பத்தி செய்து பெற்றுக் கொடுத்தல்.




அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு
STC

# நிதிக்கூற்றுக்களின் முக்கிய பதிவுகள்

2013 நிதி ஆண்டிற்குள் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் குறிப்பிடத்தக்க செயலாற்றுகையை தடம் பதித்துள்ளது. முக்கிய செயற்பாட்டுக் குறிகாட்டிகள் பின்வருமாறு.

| டிசம்பர் 31ஆந் திகதியில் முடிவடையும் வருடத்திற்கானது | | 2013 | 2012 | வித்தியாசம % |
|---|---|---|---|---|
| ஈட்டல் தொடர்பான முக்கிய தரவுகள் மற்றும் வீதம் | | | | |
| வருவாய் | ரூ.'000 | 2,893,651 | 3,269,514 | -11% |
| திறைசேரி மற்றும் வருமான வரிகளுக்கு முன் இலாபம் | ரூ. '000 | 382,337 | 801,681 | -52% |
| திறைசேரிக்கு செலுத்திய வரி | ரூ. '000 | 50,000 | 600,000 | -92% |
| வருமான வரி | ரூ. '000 | 150,223 | 37,030 | 306% |
| வருடத்திற்கான தேறிய இலாபம் | ரூ. '000 | 182,114 | 164,651 | 11% |
| உரிமைப்பங்கு மீதான ஈட்டல்கள் | % | 11.32 | 25.08 | -55% |
| சொத்துக்கள் மீதான ஈட்டல்கள் | % | 7.94 | 18.18 | -56% |
| ஐந்தொகை தொடர்பான முக்கிய தரவுகள் மற்றும் வீதம் | | | | |
| மொத்த சொத்துக்கள் | ரூ. '000 | 4,812,312 | 4,409,065 | 9% |
| மொத்த உரிமைப் பங்கு | ரூ. '000 | 3,377,223 | 3,195,933 | 6% |
| மொத்த படுகடன்கள் | ரூ. '000 | 1,435,089 | 1,213,132 | 18% |
| கடன்.'.உரிமைப் பங்குகள் | % | 42.49 | 37.96 | 12% |
| கடன்.'.மொத்த சொத்துக்கள் | % | 29.82 | 27.51 | 8% |
| வேறு தகவல்கள் | | | | |
| மொத்த ஊழியர்கள் | எண். | 2,139 | 2,187 | -2% |
| ஊழியர் ஒருவரின் வருவாய் | ரூ. '000 | 1,353 | 1,495 | -10% |
| ஊழியர் ஒருவருக்கான இலாபம் (திறைசேரி மற்றும் வருமான வரிகளுக்கு முன்) | ரூ. '000 | 179 | 367 | -51% |




வருவாய் மி. ரூ.




தேறிய இலாபம் மி.ரூ.




மொத்தச் சொத்துக்கள் மி.ரூ.




உரிமைப் பங்கு மீதான ஈட்டல்கள் %




திறைசேரி மற்றும் வருமான வரிகளுக்கு முன் இலாபம் மி.ரூ.

# நிறுவனத் தகவல்கள் 2013

கௌரவ சுசில் பிரேமஜயந்த - சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்
கௌரவ அல்ஹாஜ் ஏ.ஆர்.எம். அப்துல் காதர்- பிரதிச் சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்
கலாநிதி பீ.எம்.யூ.டீ. பஸ்நாயக்க - செயலாளர்- சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு

பணிப்பாளர் சபை - 2013

திரு எஸ். அமரசிங்க - தலைவர் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
திரு கே.எச். ஹெட்டிஆரச்சி - செயற்படு பணிப்பாளர் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
திரு ஏ.கே.ஏ.வை. தரங்க - திறைசேரி பிரதிநிதி
திரு கே.பி. ஆரியதாச - வனப் பாதுகாப்பு ஜெனரால்
(2013.11.12ஆந் திகதி இளைபாறியுள்ளார்)
திரு அனுர சத்துருசிங்க - வனப் பாதுகாப்பு ஜெனரால்
பேராசிரியர் ஹிரான் அமரசேக்கர - பணிப்பாளர்
திரு சம்பிக்க கருணாரத்ன - பணிப்பாளர்
திருமதி. மேரி டிக்மன் - பணிப்பாளர்

திரு பி.ஜீ. குமாரசிங்க சிறிசேன - பொது முகாமையாளர் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டி 2013

திரு ஏ.கே.ஏ.வை. தரங்க - கமிட்டி தலைவர்
திரு கே.பி. ஆரியதாச - கமிட்டி உறுப்பினர்
பேராசிரியர் ஹிரான் அமரசேக்கர - கமிட்டி உறுப்பினர

### தலைமை அலுவலகம் (பதியப்பட்ட விலாசம்)

82, "சம்பத்பாய"
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை
இலங்கை.

தொலைபேசி : + 94 11 2866600-5
தொலைநகல் : + 94 11 2866623
இணையத்தளம் : www.timco.lk

### கணக்காய்வு

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் திணைக்களம
டொரின்டன் சதுக்கம்
கொழும்பு - 07

### பிரதான வங்கியாளர்கள்

இலங்கை வங்கி

### நிதி ஆண்டு

ஜனவரி 01ஆந் திகதி முதல் டிசம்பர் 31ஆந் திகதி

# முகாமைத்துவக் குழு - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

| | | |
|---|---|---|
| பொது முகாமையாளர் | : பீ.ஜீ. குமாரசிங்க சிரிசேன | Bsc. Mgt(SP), Master of Management (HRM), Master of Business Administration, Post Graduate (A&FM) DIP. BUSINESS MANAGEMENT, APFA (ICA), FMAAT |
| பி. பொது முகாமையாளர் - மானிட வளங்கள், நிர்வாகம் | : கே. சிரினிவங்ஷ | Bsc., Msc. (Forestry), Dip.(Bus. mgt), Post Grad. Dip. (Forest survey-Netherland), Dip. (Forest products research-Japan) |
| பி. பொது முகாமையாளர் - இயக்குதல் | : எம்.வீ. கருணாரத்ன | Bsc. Dev. Stu. (Sp), Post Grad. Dip. (Mech. Wood Tech. & Prod. Mgt. - Finland) |
| பி. பொது முகாமையாளர் - தகவல் தொழினுட்பம் | : டீ.யூ. தயாரத்ன | Bsc. Msc.(Com. Sc) |
| பி. பொது முகாமையாளர் - வினியோகம் | : ஜீ.சேனானாயக்கா | BA.(Econ./Stat.) Spld Wood Industry- CSRREMINI in Italy |
| பி. பொது முகாமையாளர் - ஆய்வு,பயிற்சி,அபிவிருத்தி | : கலாநிதி என். ருவன்பத்திரண | Bsc. Msc. Ph. D. (Forestry) |
| பி. பொது முகாமையாளர் -உற்பத்தி, தொழினுட்பம் | : எச்.எம்.ஜீ.பி. ஹேரத் | NDT (Mech.) ,ECGI(UK), MIIESL, Post Grad. Dip. (Mech. Wood Tech. & Prod.Mgt. - Finland) |
| பி. பொது முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வு | : டப்ளியூ.டப்ளியூ.எம்.ஜே. குரே | FCA |
| பி. பொது முகாமையாளர் - நிதி | : ஜீ.டீ.எஸ். குமாரசிங்க | Bsc. (Acct. Fin. Mgt.), ACA, ACMA |

## உதவிப் பொது முகாமையாளர்கள்

| | | |
|---|---|---|
| உ. பொது முகாமையாளர் - பிராந்தியம் 1 | : எஸ்.எஸ். பண்டுவாவல | Bsc., Msc. (Forestry), Post Grad. Dip.(Forest survey-Netherland), Post Grad. Dip. (Mech. Wood Tech. & Prod. Mgt. - Finland) |
| உ.பொது முகாமையாளர் - இயந்திரப் பொறியியலாளர் | : டீ.எஸ். சமரகோன் | MIE(SL), C.Eng, NDT (Mec.), |
| உ.பொது முகாமையாளர் - உற்பத்தி | : ரீ.எஸ்சீ. புஷ்பகுமார | Bsc. ,Post Grad. Dip. (Mech. Wood Tech. & Prod.Mgt. - Finland) |
| உ.பொது முகாமையாளர் - பிராந்தியம் 11 | : எச்.பி.எஸ். நவரத்ன | Bsc., Msc. (Forestry),Post Grad.Dip in Forestry for Rural Mgt |
| உ.பொது முகாமையாளர் - பிராந்தியம் 111 | : பி.பி.ஆர். சமரவீர | Bsc., Msc. (Forestry) |

## சிரேஷ்ட முகாமையாளர்கள்

| | | |
|---|---|---|
| முகாமையாளர் - அரிமர வழங்கல் | : எம்.சீ. தேவேந்திர | Bsc. Msc (Forestry) |
| முகாமையாளர் - நிதி | : ஆர்.ஏ. தயானந்த | BA, Dip.(Acct.) ICASL (L) |
| முகாமையாளர் - நிதி | : டீ. விக்கிரமசிங்க | Dip.(FA) |
| முகாமையாளர் - சட்ட மற்றும் நிர்வாக | : டீ.கே. குருவிட்டபண்டார | MA, Attorney At Law |

## முகாமையாளர்கள்

| | | |
|---|---|---|
| முகாமையாளர்- நிதி | : ஆர்.எம்.ரத்னபால | H.N.D.A., Post Grad. Dip. in Finance (India)-1st Class, Member A.A.T., Member U.K.A.P. |
| முகாமையாளர் - நிதி | : எச்.ஏ.ஜே.எம் பீரிஸ் | ICASL (L), Higher Dip. (Accountancy) |
| முகாமையாளர் - உற்பத்தி | : கலாநிதி எம்.ஜீ.எம். தாரிக் | Bsc, Msc, Phd. |
| முகாமையாளர் - கொள்வனவு செய்தல், கப்பலேற்றல் (பதில்) | : அருண டி சில்வா | |
| முகாமையாளர் - போக்குவரத்து | : பிரீதி நாணாயக்கார | |
| முகாமையாளர் - ஆய்வு மற்றும் பயிற்சி | : சீ.கே. முத்துமால | Bsc (Agric) Hons ,Msc. (Forestry) |
| முகாமையாளர் - விசாரணை | :. ஜீ. திலக்கரத்ன | |
| முகாமையாளர் - அரிவாலைகள் | : எச்.பீ. சமந்த | Bsc, Msc (Forestry) ,National Dip in Teaching |
| முகாமையாளர் - மீன் வனநடுகை | : ஏ.பி. ரத்னசூரிய | |
| முகாமையாளர் - தளபாட பொறிகூடம் | : மதுர திசாநாயக்க | B.com, Post Grad. Dip in International Affairs |
| | : ஜே.ஜீ. திசர கமகே | Bsc., Msc (Forestry) |

## பிராந்திய முகாமையாளர்கள்

| | | |
|---|---|---|
| பி. முகாமையாளர் - மின்னேரிய | : ஆர். எதிரிசிங்க | |
| பி. முகாமையாளர் - பண்டாரவளை | : ஜீ.கே. அஜித் சந்தன | Bsc. |
| பி. முகாமையாளர் - கொழும்பு | : டப்ளியூ. கீர்த்தி ரோய் | |
| பி. முகாமையாளர் - அனுராதபுரம் | : யூ.எஸ்.எம். பெர்னாண்டோ | BA (Sp.) |
| பி. முகாமையாளர் - இரத்தினபுரி | : எச்.பீ. ரஜவத்த | BA |
| பி. முகாமையாளர் - நுவரெலியா | : ஜீ. குணவங்ஷ | BA (Sp.), Dip in Forestry |
| பி. முகாமையாளர் - மொணராகலை | : யூ.பி.எச். உளுவடுகே | Bsc. |
| பி. முகாமையாளர் - கண்டி | : ஈ.எம்.எஸ். ஏக்கநாயக்க | |
| பி. முகாமையாளர் - யாழ்ப்பாணம் | : எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா | |
| பி. முகாமையாளர் - குருணாகலை | : ஏ. எஸ் விஜேசுந்தர | |
| பி. முகாமையாளர் - மாத்தறை | : டீ.எச். ராஜபக்ஷ | Bsc., Msc |
| பி. முகாமையாளர் - அம்பாறை | : எம்கே.பி. வசந்த ராஜ் | |

## தொகுதிகளுக்கு பொறுப்பாகவுள்ள முகாமையாளர்கள்

| | | |
|---|---|---|
| முகாமையாளர் - கல்தமுல்லை தொகுதி | : கே. சந்திரபால | BA |
| பீ. பிராந்திய முகாமையாளர் - கல்தமுல்லை | : டீ.எம். புஷ்பகுமார | Bsc. |
| சிரேஷ்ட பி. மு. - கெப்பெட்டிபொல | : எம்.ஜீ.ஆர். அபேகோன் | Dip in Mgt, Dip in Forestry |
| பிராந்திய முகாமையாளர் - கெப்பெட்டிபொல | : ஏ.பீ.எம். வீரசிங்க | BA |

## பிரதி முகாமையாளர்கள்

| | | |
|---|---|---|
| பி. முகாமையாளர் - நிர்வாக | : எல்.ஜே.டீ. டி சில்வா | BA |
| பி. முகாமையாளர் - மானிட வள | : ஈ.ஏ.டீ.எஸ்.ஏ. அமரசிங்க | |
| பி. முகாமையாளர் - அரிமரத் தரப்படுத்தல்.'.ஏலவிற்பனை | : ரீ.எச் குணதாச | |
| பி. முகாமையாளர் - வன குற்றங்கள் | : டப்ளியூ.ஐ. சாரங்க | Bsc. (Hons.) |
| பி. முகாமையாளர் - பாதுகாப்பு | : சந்திம வீரமன் | |
| பி. முகாமையாளர் - நிர்மாணிப்பு,தரக்கட்டுப்பாடு: ஈ.எம்.எம். பெர்னாண்டோதொகுதிப் பகுப்பாய்வாளர் | | |
| | : ஏ. மாதுவகே | |
| பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | : எச்.எம்.எஸ். மாதவ | Bcom. (Sp) |
| உள்ளகக் கணக்காய்வாளர் | : டப்ளியூ.பி.பி.என்.கே. பொன்சேகா | BLE. (Sp) |

## பிரதிப் பிராந்திய முகாமையாளர்கள்

| | | |
|---|---|---|
| பி. பி. முகாமையாளர் - கொழும்பு | : எச்.பீ.எஸ். திஸானாயக்கா | BA |
| பீ. பி. முகாமையாளர் - பண்டாரவளை | : யூ.வீ. கித்சிறி | Dip in Forestry |
| பீ. பி. முகாமையாளர் - மாத்தறை | : ஆர் விஜேதுங்க | Bsc. (Agric. Sp.) ,Msc. (Forestry & Env Mgt) |
| பீ. பி. முகாமையாளர் - அம்பாறை | : வை.பீ.எம். அமீர் | Dip in Forestry |
| பீ. பி. முகாமையாளர் - அம்பாறை(தளபாட உற்பத்தித்தளம்) | : ஏ.சீ.ஜினேஜுதீன் | |
| பீ. பி. முகாமையாளர் - கண்டி | : டீ.ஜீ.சிறில் | |
| பி. முகாமையாளர் - மொணராகலை | : கே.ஜே. ஹேமரத்ன | Bsc. (Agri) |
| பீ. பி. முகாமையாளர் - குருணாகலை | : ஆர்.எம்.எஸ்.கே. ரத்னாயக்கா | |
| பீ. பி. முகாமையாளர் - இரத்தினபுரி | : ஏ.ஜீ. ஹேமந்த குலரத்ன | Dip in Forestry, Dip in Mgt , Dip in English |

# தலைவரின் மீளாய்வு

**"நாம் எப்போதும் உயர் தரங் கொண்ட நிர்வாகமொன்றினை ஏற்படுத்துவதற்கும் மிகவும் நலன்மிக்கதாக செயற்படுவதற்கு நிறுவனத்தின் எல்லா பிரிவுகளையும் ஆர்வமூட்டுவதன் மூலம் நிறுவனத்தின் இலக்கினை நிறைவேற்றிக் கொள்வதற்காக எம்மை அர்ப்பணிக்கின்றோம்"**



அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் பெருமைமிகு 45 ஆவது வருடத்தினைப் பெருமிதத்துடன் கொண்டாடும் இவ்விசேட ஆண்டில் கடந்து வந்த காலம் முழுதும் செயற்பாட்டு செயல் நோக்கினை விரிவுபடுத்தியவாறு வெற்றிகரமிக்க பயணப்பாதையில் தடம் பதித்துள்ளதை பேருவகையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். 2013 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடு குறித்து விளக்கம் பெறக்கூடிய நிதிசார் செயலாற்றுகைகள், நிதி நிலைமைகளை எடுத்துக் காட்டும் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த கணக்குகள் உள்ளடங்கிய வருடாந்த அறிக்கையினை வெளியிடுவதில் பெருமிதமடைகின்றேன். நாம், நாட்டின் நம்பிக்கையை வென்ற தரம்மிகு அரிமர மற்றும் மரத்தாலான தளபாடங்களை வழங்குனராக முன்னோடித் தலைமைத்துவத்தினை பெற்றுள்ளது. 12 பிராந்திய அலுவலகங்கள், 54 விற்பனை நிலையங்கள் மற்றும் 200 இற்கும் அதிகமான மரங்களை வெட்டும் செயற்படு வேலைத்தளங்கள் மற்றும் மரம் பதப்படுத்தும் மற்றும் பரிகரிக்கும் பொறித் தொகுதிகள் ஆகியவற்றைக் கொண்ட 03 தளபாட உற்பத்தி நிலையங்களுக்கு நாம் உரியவராவோம். உறுதிமிக்க மற்றும் இலாபகரமான வியாபாரமாக வெற்றியினை அடைவதற்கு நாடு முழுதும் கிளைகளின் விரிவாக்கமும், ஆர்வமிக்க தரப்பினரிடையே பெரும் ஆதரவும், பொருட்களின் பல்வகைப்படுத்தியமை, நவீன தொழில்நுட்பம் என்பன வழிகோலியன எனக் கூறலாம்.

2012ஆம் ஆண்டில் 6.4மூ பொருளாதார வளர்ச்சி வீதத்திற்கு ஒப்பாக இலங்கை 7.3மூ பொருளாதார வளர்ச்சி வீதத்தினை 2013ஆம் ஆண்டின் போது அடைந்து கொண்டுள்ளதுடன், ஏனைய பிரிவுகளுடன் ஒப்பிடுகையில் சேவைகள் பிரிவினால் கூடுதலான பங்களிப்பு கிடைக்கப் பெற்றது. உலகலாவிய பொருளாதார வளர்ச்சி வீதம் குறைந்த பெறுமானத்தைக் கொண்ட போதும், இலங்கையில் புதிய சந்தைகள் திறந்தமையும், அரசின் தலையீட்டினால் பணவீக்க வீதத்தினை நிலையான மட்டத்தில் பேணியதன் காரணமாக துரிதமிகு பொருளாதார வளர்ச்சியினை நோக்கி பயணிக்கின்றது.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும் காரணிகளுள் முகாமத்தவம் குறித்து பொருளாதார, சமூக, அரசியல், உயிரியல் பின்னணியினைப் புரிந்து கொண்டும், அப்பிரிவுகளைச் சமநிலைப்படுத் துவதும் ஆபத்துமிக்கதும் சவால் மிக்கதுமான காரியமாகும். காடழிப்பு இன்று காணப்படும் பாரிய சுற்றாடற் பிரச்சினையாகும். அரிமர மற்றும் மரத்தாலான பொருட்களுக்குள்ள உயர் கேள்வியின் காரணமாக சட்டரீதியற்ற முறையில் காடழிப்பினை மேற்கொள்ள முயற்சிக்கும் இக்காலகட்டத்தில் உரிய முறையிலான முகாமைத்தவத்தினால் மாத்திரம் வன வளத்தினை எதிர்கால பரம்பரையின் பயன்பாட்டிற்காக பாதுகாப்ப முடிகின்றது. உறுதிமிக்க மர அறுவடை செய்கையில் காடழிப்பிற்கு காரணமாகாது. அதாவது, மர அறுவடையின் போது வனப்பயிர்ச் செய்கை நிலத்தில் உற்பத்தித் திறன் பாதுகாக்கப்பட்ட நிலையில், முறையாகவும் விஞ்ஞான ரீதியிலும் செயற்படுவதால் மற்றும் வயதுசென்ற மரங்களுக்குப் பதிலாக புதிய மர நடுகை செய்து புதிய வனப்பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு செயற்படுவதன் மூலம் மாத்திரம் சமூகத்திற்கு நீண்ட கால நன்மையை வழங்க முடிகிறது. எவ்வாறெனினும், மரம் என்பது நிலையாக இருக்கக்கூடிய ஒரு உயிர் அன்று. ஏதேனும் சந்தர்ப்பத்தில் முதிர்ச்சியடைந்த மரங்கள் உக்கிப் போய், அதற்குப் பதிலாக வேகமாக வளரும் இளம் மரங்கள் இந்நிலத்தினை ஆக்கிரமிப்பதன் மூலம் இயற்கையாகவே முதர்ச்சியடைந்த மரங்கள் இறந்து அதற்குப் பதிலாக புதிய மரங்களின் மீள் நடுகை நடைபெறுகின்றது.

இவ்வாறான பின்னணியில், எமது கூட்டுத்தாபனம் 2,894 மி.ரூ. மொத்த விற்பனையாக ஈட்டியுள்ளதுடன், அது கடந்த வருடத்தில் 3,270 மி.ரூபாவாக இருந்தது. இது கடந்.த வருடத்துடன் ஒப்பிடுகையில் 11மூ பின்னடைவாகும். அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஈட்டிய தேறிய இலாபத்திற்கு முன்னரான வரி இவ்வருடத்தில் 382 மி.ரூபாவாக இருந்ததுடன், கடந்த வருடத்தில அது 802 மி. ரூபா எனப் பதியப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்க அளவில் மொத்த விற்பனை குறைவதற்கு பொருளாதார, அரசியல், சமூக போன்ற தவிர்க்க முடியாத காரணிகள் பலவற்றின் விளைவாகும். 1,245 மி.ரூ. உரிமைப்பங்கு, செயற்படு வரி, திறைசேரிக்குச் செலுத்திய விசேட வரி என அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் தேசிய பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனத்தின் பெறுமதிமிக்க வளமானது எமது நம்பிக்கையாகும். 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடந்த வருடத்தைப் போன்றே எமது கூட்டுத்தாபனத்தின் மனித வளப் பயிற்சி மற்றும் தொழிற்சார் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் மூலம் ஆற்றல்கள் மற்றும் திறன்களை மேலும் விருத்தி செய்து வாடிக்கையாளருக்கு கூடிய வினைத்திறனுடனும் உச்ச அளவில் சேவைகளை வழங்குவதற்கும் நிறுவனத்தின் இலக்குகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் எப்போதும் கூட்டுத்தாபனத்தின் எல்லா பிரிவுகளிலும் நல்ல நிர்வாகத்தினையும் மிகவும் நல்ல செயற்பாடுகளுக்கு அமைய செயற்படுவதற்கும் முயற்சிக்கின்றது. எமது வெற்றிக்குச் சான்றாக, "தெவ ஜவயட்ட நவ ஜவயக்" என்ற தொனிப்பொருளை வலுப்படுத்தியவாறு, அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் இவ்வருடத்தில் தேசிய வியாபார அதிசிறந்த விருதுகள் வழங்கும் வைபவத்தில் மிண்டும் ஒரு முறை விருதினைச் சுவீகரித்துக் கொண்டது. எதிர்கால வளமான வாழ்விற்காக பொறுப்புடனும் நிலைப்பாட்டுடனும், ஆக்கமிக்க புது உற்பத்திகளுடனும் முதலீடு செய்வதற்கு நாம் ஆர்வமாயுள்ளோம். மேலும், தேசதத்தின் கூட்டுத்தாபனப் பிரஜையாக மர நடுகையினை மேலும் வலுப்படுத்தவதற்கு இனங்காணப்பட்ட பாடசாலைகள் பலவற்றிற்கு பொருள் ரீதியாகவும் பண ரீதியாகவும் நன்கொடைகளை வழங்கி இளஞ் சந்ததியினரின் மர நடுகைக் குறித்த ஆர்வத்தினை அதிகரிக்கும் நோக்கில் துருஜன மாணவர் வங்கி மரநடுகை செயற்படுத்தப்பட்டது. மேலும், தெயட்ட செவண, தேசிய மரநடுகை நிகழ்ச்சிக்காக 88,000 சிறிய கன்றுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. அன்றாட குப்பைகளை அகற்றும் போது அவற்றை கடதாசி, பொலித்தீன், சேதனப் பொருட்கள் என வகைப்படுத்தி அகற்றுவதற்கு கவனத்திற் கொண்டுள்ளோம். மேலும், சமூகத்தினரிடையே மரப் பாவனை தொடர்பில் உள்ள கருத்து வேறுபாடுகளை இல்லாதொழிக்கும் நோக்குடன் தேசத்தின் மகுடம் கண்காடசியின் போது கடும் முயற்சியுடன் செயற்பட்டோம்.

பணிப்பாளர் சபை சார்பாக கௌரவ சுற்றாடல் மற்றும் புதுப்பிககத்தக்க சக்தி அமைச்சர் அவர்களுக்கும், அமைச்சின் செயலாளர் அவர்களுக்கும், அதன் பணிக்குழாதினருக்கும், வனப் பாதுகாப்பு தலைமை அதிபதி அவர்கள் மற்றும் அத்திணைக்களத்துடன் இணைந்துள் எல்லா பணிக் குழாத்தினருக்கும், ஏனைய சகல அரசாங்க எத்தியொகத்தர்களுக்கும் எமக்கு வழங்கிய பாரிய ஆதரவிற்கு நன்றிகளை மணப்பூர்வமாகத் தெரிவிக்கின்றென். பல்வேறு கஷடங்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் எமது பொது முகாமையாளர் உட்பட பணிக்குழாத்தினர் அவர்களது ஆற்றல் மற்றும் நிபுணத்துவ அறிவைப் பயன்படுத்தி கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையை உயர்ந்த மட்டத்திற்கு இட்டுச் செல்வதற்கு எடுத்தக் கொண்ட பாராட்டுதலுக்குரிய முயற்சிகளுக்காக எமது விசேட நன்றிகளை அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

2014ஆம் வருடம் மிகவும் எளிதான வருடமாக நாம் எதிர்பார்க்காவிடினும், குறுகிய கால சவால்களைச் சளைக்காது முகங்கொடுத்து எப்போதும் நீண்ட கால சவால்களை எதிர் கொண்டு, எதிர்பார்க்கும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு எமது ஆற்றல்களை உச்ச அளவில் பயன்படுத்தி மிகச் சிறந்த பெறுபேற்றினை அடைவதற்கு அர்ப்பணிப்புடன பணிபுரிய கடப்பாடு கொண்டுள்ளோம்.

எஸ். அமரசிங்க
தலைவர்
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

# பொது முகாமையாளரின் மீளாய்வு



**“எம்மால் பெருமைப்படக்கூடிய கௌரவமிக்க நற்பெரினை உருவாக்கி உள்ளோம். சந்தையில் 45 வருடகால அனுபவத்துடன் மிகவும் தரமிக்க மரத்தாலான தளபாடங்களை நியாயமான விலையில் வழங்குவதுடன், நிரந்தர வாடிக்கையாளர் மட்டுமல்லாது புது வடிக்கையாளர்களும் எமது சேவையினை இட்டு நன்கு திருப்தியடைகின்றனர்”**

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையினை வெளியிடுவதற்கு நான் மிகவும் மனமகிழ்வதுடன், இவ்வருடத்தில் 45ஆவது வருடப் பூர்த்தியினை கொண்டாடுவது குறித்து மிகவும் திருப்தியுடன் கூறிக்கொள்கின்றேன். எல்லா சவால்களுக்கும் வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கும், கௌரவமிக்க நற்பெயரினை உருவாக்கிக் கொள்வதற்கும் எம்மால் முடிந்தது. சந்தையில் 45 வருடகால அனுபவத்துடன் மிகவும் தரமிக்க மரத்தாலான தளபாடங்களை நியாயமான விலையில் வழங்குவதுடன், நிரந்தர வாடிக்கையாளர் மட்டுமல்லாது புது வடிக்கையாளர்களும் எமது சேவையினை இட்டு நன்கு திருப்தியடைகின்றனர்.

அரிமரம் மற்றும் மர உற்பத்திகளை வழங்கும் முன்னோடியாக உற்பத்திக் கைத்தொழிலினை உயர்த்தவதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் மிக முக்கியமான பொறுப்பினை தொடர்ந்தும் நிறைவேற்றுகின்றது. எமது நோக்கிற்கமைய நாட்டின் நம்பிக்கையை வென்ற அரிமரம் மற்றும் மர உற்பத்தி வழங்குனராக இருத்தல் மற்றும் மரச் சந்தையில் உண்மையான தலைமைத்துவத்தினைச் சுமக்கும் செயற்பாடுகளுக்கு நாம் முதலிடம் கொடுக்கின்றோம். அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் நாடு முழுதும் வியாபித்திருக்கும் 12 பிராந்திய அலுவலகங்களுடன், நாட்டில் முதன்மையாளரான தொடர்ந்தும் சக்திமிக்கதாக எழுந்து நிற்கின்றது. புது தொழில்நுட்பத்தினை உற்பத்தியில் பயன்படுத்தி மக்களின் வாழ்க்கையினை உயர்த்தவதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அளப்பரிய பணியினை நிறைவேற்றுகின்றது.

பொறுப்புடன் கூடிய மர அறுவடை செய்தல் உறுதியான முகாமைத்துவத்திற்கு ஏதுவாகின்றது என்பது எமது நம்பிக்கையாகும். உறுதியான முகாமைத்தவம் வேகமாக மற்றும் முறையாக வெளியாகும் கருதுகோள்ாக இருப்பதுடன், தற்கால மற்றும் எதிர்கால பரம்பரையினரின் அபிவிருத்திக்காக வன வளங்களின் பொருளாதார, சமூக, சுற்றாடல் பெறுமானங்களைப் பாதுகாப்பதற்கும் உயர்த்துவதற்கும் வழிகோலும்.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் 2,894 மி.ரூ. மொத்த விற்பனையாக ஈட்டியுள்ளதுடன், அது கடந்த வருடத்தில் 3,270 மி.ரூபாவாக இருந்தது. இப்பின்னடைவிற்கு பிரதானமான காரணமாக சிலிப்பர் கட்டைகள், மரக் குற்றிகள், மரத்துண்டங்கள், மின் கம்பங்கள் ஆகியவற்றின் விற்பனை வருமானத்தில் ஏற்பட்ட குறைவே எனக் கூறலாம். எவ்வாறெனினும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் கடந்த வருடத்தில அது 802 மி. ரூபாவுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் தேறிய இலாபத்திற்கு முன்னரான வரி 382 மி.ரூபாவினை ஈட்டியுள்ளதுடன், தேசிய பொருளாதாரத்திற்கு 1,277 மில்லியன் ரூபா பங்களிப்பினை வழங்கியதன் பின்னர் தேறிய இலாபம் 182 மி. ரூபா எனப் பதியப்பட்டுள்ளது. அதற்கு நேரொத்ததாக சொத்துக்கள் மீதான வருவாய் வீதம் 8ூஆகவும், உரிமைப்பங்கு மீதான வருவாய் வீதம் 11ூஆகவும் பதிவு செய்வதற்கு கூட்டுத்தாபனத்தினால் முடிந்துள்ளது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் பலவீனமான செயலாற்றுகையினைக் காட்டுவதற்கு அப்போது இருந்த சமூக,அரசியல், சுற்றாடல, பொருளாதார பாதகமான நிலைமைகள் பெரிதும் செலுத்தியுள்ளன என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

எமது உயர்ந்த உற்பத்தி நியமங்களை மென்மேலும் உறுதிப்படுத்தியவாறு 2013ஆம் நிதி ஆண்டின் பொது, நாம் அடைந்துகொண்ட குறிப்பிடத்தக்க வெற்றியினைக் குறித்து இங்கு குறிப்பிடுவதில் பெருமிதம் அடைகின்றேன். நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பங்களிப்பினை வழங்கியபடி, சிறந்த முறையில் வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் செல்லும் வியாபார நிறுவனத்தினை இனங்காண்பதற்காக இலங்கை தேசிய வர்த்தகச் சபையினால் நடாத்தப்பட்ட 2013 தேசிய வர்த்தகச் சிறப்பு விருது வழங்கும் வைபவத்தில் அரசாங்க உற்பத்திப் பிரிவிற்கு உரிய அதிசிறந்த விருதினை அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சுவீகரித்துக் கொண்டது. மேலும் எமது நிலைப்பாட்டிற்காக மாத்திரம் அல்லாது, எமது எதிர்கால சந்ததியினருக்காக சுற்றாடல் குறித்து கவனஞ் செலுத்தும் மற்றும் பொறுப்புடைமையின் அவசியத்தை இனங்கண்டு “தேசத்திற்கு நிழல்” (தெயட்ட செவண) தேசிய மர நடுகை நிகழ்ச்சியின் கீழ் கூட்டுத்தாபனத்திற்கு உரிய தவான்களில் நட்ட 88,000 கன்றுகள் வழங்கப்பட்டன. அவ்வாறே இளஞ் சமூகத்தினரிடையே உலக சுற்றாடல் தினத்தையொட்டி “துருஜன மாணவர் வங்கி” மர நடுகை நிகழ்ச்சித் திட்டம் பயன்மிக்கதாக தொடர்ச்சியாக இவ்வருடத்திலும் செயற்படுத்தப்பட்டது.

ஈற்றில் கூட்டுத்தாபனத்தின் மேம்பாட்டிற்காக தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும் சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர், பிரதி அமைச்சர், அமைச்சின் செயலாளர், தலைவர், செயற்படு பணிப்பாளர் ஆகியோரின் உட்பட பணிப்பாளர் சபையின் பணிகளை நான் பாராட்டுவதுடன், அரிமரம் மற்றும் மரத்தாலான உற்பத்திகளின் வழங்குனராக தொர்ந்தும் எம்மிடம் கடும் பக்கசார்பினைக் காட்டும், எமது வெற்றிக்கு அத்திவாரமாக உள்ள வாடிக்கையாளர் நண்பர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், எமது பிணைப்பு மென்மேலும் வலுப்பெற முடியுமான உச்ச முயற்சியுடன் தாங்களுக்கு தரம் மிக்க உற்பத்திகளை வழங்குவதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம்.

வெற்றிமிக்க பாதை வழியே வேகமானதும் உறுதியானதுமான பயணஞ் செல்ல சளைக்காத ஆதரவை வழங்கும் எனது முகாமைத்துவக் குழுவின் அனைத்து அன்பர்களுக்கும் என்றும் ஆர்வத்துடன் கூடிய அர்ப்பணிப்புடன் செயற்படும் 2,139க்கும் மேற்பட்ட எமது பணிக் குழாத்தினருக்கும் எனது மதிப்பிற்குரிய பாராட்டுதல்களைத் தெரிவிப்பதுடன், பல்வேறு விதத்திலும் ஆதரவினை வழங்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பி.ஜீ.குமாரசிங்க சிறிசேன
பொது முகாமையாளர்
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம

# எமது பொறுப்புக்கள

காடுகளிலிருந்து மரங்களை வெட்டி அகற்றுதல், அம்மரங்களை அரிமரங்களாகவும் முடிவுப் பொருட்களாகவும் மாற்றுதல், மரக்குற்றிகள், அரிமரங்கள், முடிவுப் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் இக்காரியங்களுக்கான காட்டுப் பாதைகளை அமைத்தல்

மரக்குற்றிகளாக்கும் நிலையங்கள், அரியும் ஆலைகள், எண்ணெய் இடுதல் மற்றும் பாதுகாப்புப் பொறித்தொகுதிகள், அரிமரங்களை உலர வைத்தல் மற்றும் உலரவைக்கும் சூளைகள், தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், அமைத்தல், செயற்படுத்துதல்

அரிமர விற்பனை நிலையங்களை நடாத்துதல்

அரிமர உப பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை

அரிமரங்களை இறக்குமதி செய்தல்

புதிய காடுகளை நடும் செயற்றிட்டங்களை ஆரம்பித்தல், மீள் நடுகைகளை மேற்கொள்ளல், காடு மற்றும் காட்டு நடுகைகளை விஞ்ஞான ரீதியாக முகாமைத்துவம் செய்தல்

விவசாய உற்பத்திகள்

அரிமரம் தொடர்பான முடிவுப் பொருட்கள் மற்றும் அரை முடிவுப் பொருட்கள் உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல்

தனியார் காணிகளிலிருந்து மரங்களைக் கொள்வனவு செய்தல்

காடு சார்ந்த உற்பத்திகளைப் பதனஞ் செய்தல்

பிரம்புகளை இறக்குமதி செய்தல்

மாதிரிகளைப் பரீட்சிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிமரங்களை இனங் காணல் மற்றும் அரிமரச் சான்றிதழ்களை வழங்கல்

அரிமரக் கைத்தொழில் சார்ந்த விடயங்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல், சான்றிதழ்கள் வழங்குதல், சுற்றாடல் தொடர்பான அறிவுறுத்தல் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்

கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களின் முழுப் பயனையும் பெற்றுக் கொள்வதற்காகத் திட்டமிடல் மற்றும் அதற்கு முதலீடு செய்தல்

# எமது வர்த்தகப் பெறுமானங்கள

சூழல் நேயம் மிகுந்த மற்றும் வர்த்தக ரீதியாக வெற்றிகரமாகச் செயற்படக்கூடிய அரசாங்கத்துறை நிறுவனமொன்றாக எமது நிலைப்பாட்டைப் பேணுவது எமது முதன்மையான பொறுப்பு என இனங்கண்டுள்ளோம்.

சுத்தமான மற்றும் ஆரோக்கியமான சூழலைப் பாதுகாப்பதற்கு காடுகள் மற்றும் அரிமரங்களை அகற்றும் விஞ்ஞான ரீதியான முகாமைத்துவம் தொடர்பான அனைத்து நியதிச்சட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைய அவற்றை நிறைவேற்றுவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

எமது வாடிக்கையாளர்களுடன் நேர்மையான வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு, அவர்களுக்கும் அனைத்து இலங்கையர்க்கும் பெறுமதிகளை உருவாக்குதல் எமது நிலைப்பாட்டின் முதன்மைக் காரணி என நாம் எற்றுக் கொண்டுள்ளோம்.

திறன்களின் வளர்ச்சி, தொழில் அபிவிருத்தி, தொடர்ச்சியான கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றால் எமது ஊழியர்களின் விளைபயன் மட்டத்தை மேம்படுத்துவதற்கு செயற்படுகின்றோம்.

எமது வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறன் மற்றும் நேர்மையான சேவையை வழங்குவதற்கு எமது எல்லா காரியங்களிலும் அவர்களை முதன்மைப்படுத்தி செயற்படுகின்றோம்.

எமது அனைத்து செயற்பாடுகளின் போதும் மற்றும் சேவைகளை வழங்கும் போதும் தனிப்பட்ட விசுவாசத்தினை உயர் மட்டத்தில் பேணுவதாக உறுதிப்படுத்துகின்றோம்.

எமது எதிர்கால சந்ததியினரின் பெறுமதிமிக்க தேசிய மரபுரிமைகளான சூழல் மற்றும் வன வளங்களைப் பாதுகாத்தலும் விருத்தி செய்தலும் தொடர்பான அனைத்து நியதிச்சட்ட ஒழுங்குவிதிகளையும் சமூக விழுமியங்களையும் பின்பற்றுகின்றோம்.



# பணிப்பாளர் சபை 2013

| | | |
|---|---|---|
| திரு எஸ். அமரசிங்க | - | தலைவர் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் |
| திரு கே.எச். ஹெட்டிஆரச்சி | - | செயற்படு பணிப்பாளர் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் |
| திரு ஏ.கே.ஏ.வை. தரங்க | - | திறைசேரி பிரதிநிதி |
| திரு கே.பி. ஆரியதாச | - | வனப் பாதுகாப்பு ஜெனரால் |
| திரு அனுர சத்துருசிங்க | - | வனப் பாதுகாப்பு ஜெனரால் |
| பேராசிரியர் ஹிரான் அமரசேக்கர | - | பணிப்பாளர் |
| திரு சம்பிக்க கருணாரத்ன | - | பணிப்பாளர் |
| திருமதி. மேரி டிக்மன் | - | பணிப்பாளர் |





பீ.ஜீ. குமாரசிங்க சிறிசேன
பொது முகாமையாளர்



எம்ரீ.கருணாரத்ன
பி. பொது முகாமையாளர
(இயக்குதல்)



கே. சிறினிவங்ஷ
பி. பொது முகாமையாளர
(மனித வள, நிர்வாக)



டீ.யூ. தயாரத்ன
பி. பொது முகாமையாளர
(தகவல் தொழில்நுட்ப)



ஜீ. சேனானயக்க
பி. பொது முகாமையாளர
(விற்பனை)

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு 2013

## அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்



டபளியூ.டப்.ளியூஎம்.ஜே. குரே
பி. பொது முகாமையாளர
(உள்ளகக் கணக்காய்வு)



எம்.எம்.ஜீ.பீ. ஹேரத்
பி. பொது முகாமையாளர
(உற்பத்தி, தொழில்நுட்பம்)



கலாநிதி என். ருவன்பத்திரண
பி. பொது முகாமையாளர
(ஆய்வு, பயிற்சி, அபிவிருத்தி)



ஜீ.டீ.எஸ். குமாரசிங்க
பி. பொது முகாமையாளர
(நிதி)

# 2013 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் சபை மீளாய்வு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2013 கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த கணக்குகள் உள்ளடங்கிய ஆண்டறிக்கையினை வெளியிடுவதில் மனமகிழ்கின்றோம்.

## பணிப்பாளர் சபை - 2013

| | | |
|---|---|---|
| திரு எஸ். அமரசிங்க | - | தலைவர் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் |
| திரு கே.எச். ஹெட்டிஆரச்சி | - | செயற்படு பணிப்பாளர் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் |
| திரு ஏ.கே.ஏ.வை. தரங்க | - | திறைசேரி பிரதிநிதி |
| திரு கே.பி. ஆரியதாச (2013.11.12ஆந் திகதி இளைபாறியுள்ளார்) | - | வனப் பாதுகாப்பு ஜெனரால் |
| திரு அனுர சத்துருசிங்க | - | வனப் பாதுகாப்பு ஜெனரால் |
| பேராசிரியர் ஹிரான் அமரசேக்கர | - | பணிப்பாளர் |
| திரு சம்பிக்க கருணாரத்ன | - | பணிப்பாளர் |
| திருமதி. மேரி டிக்மன் | - | பணிப்பாளர் |

இவ்வாண்டில் கூட்டுத்தாபனத்தால் 2,894 மி. ரூபா மொத்த விற்பனையொன்றினைப் பெற்றுள்ளதுடன், (கடந்த வருடத்தில் மொத்த விற்பனை 3,270 மி.ரூ.) அதனைக் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 11.5மூ வீழ்ச்சியாகும். இவ்வீழ்ச்சிக்கு பல விடயங்கள் ஏதுவாயுள்ளன. விசேடமாக பிரதான வருமானத்தை ஈட்டித்தரும் அரிமரக்குற்றிகளின் விற்பனை குறைதல், சிலிப்பர்கள் விற்பனை குறைதல், கூடுதலான ஊழியர் செலவினங்கள், தவிர்க்கமுடியாத நிர்வாகச் செலவுகள் அதிகிரித்தல், விற்பனை மற்றும் விநியோகத்தில் செலவுகள் அதிகரித்தல் ஆகியன கூட்டுத்தாபனத்தின் வருவாய் குறைவதற்குப் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன. கூட்டுத்தாபனத்தின் மொத்தச் செலவு கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 3மூ ஆல் அதிகரித்துள்ளது.

மொத்த இலாபம் 23மூ ஆல் குறைவடைந்துள்ளதுடன், அது 1,198 மி. ரூபாவாகும்.

### மொத்த விற்பனை (மி. ரூபா)




### மொத்த இலாபம் (மி. ரூபா)




| செயலாற்றுகை | 2013 மி. ரூ. | 2012 மி. ரூ. |
|---|---|---|
| மொத்த விற்பனை | 2,894 | 3,270 |
| மொத்த இலாபம் | 1,198 | 1,546 |
| ஏனைய செயற்படு வருமானங்கள் | 61 | 76 |
| செயற்படு இலாபம் | 124 | 584 |
| மேலதிக நிதிய முதலீட்டு வட்டி, வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றம் இலாப.்.நட்ட, கட்டட வாடகை | 258 | 218 |
| திறைசேரிக்கு செலுத்திய விசேட வரி | 50 | 600 |
| திறைசேரி மற்றும் வருமான வரிகளுக்கு முன்னரான தேறிய இலாபம் | 382 | 802 |
| ஈடுபடுத்திய சொத்துக்கள் மீதான பங்கிலாபம் | 8% | 18% |

நிறுவன, நிர்வாக, விற்பனை, விநியோகம் ஆகியவற்றின் செலவினங்கள் 1,135 மி.ரூ வரை அதிகரித்துள்ளதுடன், கடந்த ஆண்டின் போது அது 1,038 மி. ரூபாவாகும். நிறுவன மற்றும் நிர்வாகச் செலவினங்களின் அதிகரிப்பு கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 12மூ ஆக இருப்பதுடன், விற்பனை வருமானத்தின் அது 23மூ பெருமானத்தைக் கொள்கின்றது. எனினும் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள் 6மூ இனால் அதிகரித்துள்ளது.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் குறுங்கால ஆபத்து மற்றும் உறுதியற்ற தன்மை ஆகயிவற்றின் அடிப்படையில் தேசிய பொருளாதார நிலைமைகளையும் சூழல் காரணிகளையும் ஏதுவாகக் கூறலாம். பெரும்பாலான மூலப்பொருட்களின் விலை அதிகரித்ததுடன், அதற்கு அக்காலத்தில் நாட்டினுள் நிலவிய சந்தை நிலை பெரிதும் தாக்கஞ் செலுத்தியுள்ளது. இவ்வெல்லா தடைகளைகளையும் வெற்றி கொண்டு இலாபத்தில் தொடர்ந்தும் வளர்ச்சியினை அடைதல் கூட்டுத்தாபனத்தின் உபாயங்களுக்கான தீர்வானதொரு விடயமாகும். பாதகமான சந்தை நிலைமையினால் மூலப்பொருட்களின் விலை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்ததுடன், மூலப்பொருள் பற்றாக்குறையும் உயர் உற்பத்திச் செலவும் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திச் செயன்முறையில் நேரடியான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன.

## ஏனைய செயற்படு வருமானங்கள் (மி.ரூபா)




2013ஆம் ஆண்டின் இறுதியில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்குரிய 2139 நிரந்தர ஊழியர்கள் பணியில் ஈடுபட்டதுடன், (2012 : 2,187) மொத்த ஊழியர் செலவினம் 1,117 மி.ரூ. (2012 : 1,065) வரை அதிகரித்துள்ளது. 2012ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 5மூ அதிகரிப்பாகும்.

## செயற்படு இலாபம் (மி.ரூபா)




2013ஆம் ஆண்டின் பொது, 388 மி. ரூபா கூட்டப்பட்ட பெறுமானத்தின் படி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டதுடன், இதற்கு மேலதிகமாக ஏனைய வரிகள் மற்றும் வருமான வரி ஆகியவற்றுக்காகவும் கூட்டுத்தாபனம் வரித் தொகையினை உரிய முறையில் செலுத்தியுள்ளது. அவ்வாறே விசேட வரியாக அரசாங்க திறைசேரிக்கு 50 மி. ரூபா வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது.

## திறைசேரி மற்றும் வருமான வரிகளுக்கு முன்னரான தேறிய இலாபம் (மி. ரூபா)




நிறுவன, நிர்வாக, விற்பனை, விநியொகம் ஆகியவற்றின் செலவினங்களைக் குறைத்ததன் பின்னர் விசேட திறைசேரி வரி மற்றும் வருமான வரிகளுக்கு முன்னரான தேறிய இலாபம் 382 மி. ரூபா வரை வீழ்ச்சியடைந்ததுடன், 2012ஆம் ஆண்டின் போது இது 802 மி.ரூபாவாகப் பதியப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் சொத்துக்கள் மீதான பங்கிலாப வீதமானது 2013ஆம் ஆண்டின் போது 8மூ ஆவதுடன், 2012ஆம் ஆண்டில் இது 18மூ ஆக இருந்தது.

# உற்பத்தி

| மர வகை | முற்றாக வெட்டுதல் (ஹெக்டேயர்) | | மெல்லியதாக்குதல் (ஹெக்டேயர்) | |
|---|---|---|---|---|
| | 2013 | 2012 | 2013 | 2012 |
| தேக்கு | 600.0 | 558.5 | - | 87.8 |
| யூகலிப்டஸ் | 26.0 | 152.7 | 352.2 | 336.8 |
| பைனஸ் | 124.6 | 83.3 | - | - |
| காயா | - | - | - | 10.6 |
| எக்கேஷியா | 27.0 | 35.5 | - | - |

## அரச காடுகளிலிருந்து அரிமரங்களை வெட்டுதல்

வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் மூலம் வன முகாமைத்துவ திட்டத்திற்கு ஏற்ப வெட்டுவதற்காக தேக்கு, பைனஸ், யூகலிப்டஸ் போன்ற காட்டு மரங்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன்,2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் வெட்டுவதற்கு விடுவிக்கப்பட்டுள்ள ஹெக்டேயர் அளவு மேலே குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

## குற்றிகளை மரத்துண்டங்களாக்குதல்

20128ஆம் வருடத்தில் மரத்துண்டங்கள் உற்பத்தி 4,955 கன மீற்றருக்கு ஒப்பாக 2013ஆம் வருடத்தில் 4,117 கன மீற்றர் மரத்துண்டங்கள் அரியும் ஆலைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், நாடு முழுதும் உள்ள அரியும் ஆலைகளிலிருந்து 2,487 கன மீற்றர் மரத்துண்டங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

## மின்கம்பங்கள் மற்றும் சிலிப்பர் கட்டைகளைப் பரிகரித்தல்

2013ஆம் வருடத்தில் 73,526 சிலிப்பர் கட்டைகள், 31,887 மின்கம்பங்கள், 26,475 யானை வேலிக் கம்பங்கள் என்பன அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் கல்தமுல்லை, கெப்பெட்டிபொலை, பூசா ஆகிய பரிகரிப்பு நிலையங்களில் பரிகரிப்பு செய்யப்பட்டுள்ளன. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2013ஆம் ஆண்டில் சிலிப்பர் கட்டைகள் மற்றும் யானை வேலிக் கம்பங்கள் ஆகியவற்றைப் பரிகரிப்பு செய்வதில் குறிப்பிடத்தக்க அளவு பின்னடைவு காணப்பட்டது.

## தளபாட உற்பத்தி

அரசாங்க மரக கூட்டுத்தாபனத்தின் அம்பாறை, கல்தமுல்லை, பூசா ஆகிய தளபாட உற்பத்தி நிலையங்களிலிருந்து 211.5 மில்லியன் ரூபா பெறுமதியான தளபாடங்கள் மீளாய்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அத்துடன் 194.6 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க தளபாடங்கள் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் இரத்மலானை, பண்டாரவளை, இரத்தினபுரி, தலல்ல, பூசா, அம்பாறை தளபாட காட்சியறைகளிலிருந்து விற்பனை செய்யப்பட்டுள்ளன.

# எமது சேவைகள் கிடைக்கும் இடங்கள்

பிராந்திய 12 காரியாலயங்கள், நாடு முழுதும் செயற்படும் 54 அரிமர விற்பனை களஞ்சியசாலைகள், கல்தமுல்லை, அம்பாறை, பூசா ஆகிய இடங்களில் 03 தளபாட உற்பத்தி நிலையங்கள், கண்டி, இரத்தினபுரி, தலல்ல, அம்பாறை, கல்தமுல்லை, பூசா ஆகிய இடங்களில் 06 தளபாட காட்சியறைகள், கெப்பெட்டிபொல, கல்தமுல்லை, பூசா ஆகிய இடங்களில் 03 அரிமரப் பதனிடல் பொறித்தொகுதிகள், அம்பாறை, கண்டி, பூசா, கல்தமுல்லை, இரத்மலானை, தலல்ல ஆகிய இடங்களில் 06 மர ஆலைகள், பண்டாரவளையில் 04 மர ஆலைகள், இரத்தினபுரியில் 02 மர ஆலைகள், கெப்பெட்டிபொலவில் 04 மர ஆலைகள், குருணாகலையில் 02 மர ஆலைகள் என்றவாறு நடாத்துவதுடன், நாட்டின் அனைத்து பாகங்களும் உட்படுமாறு நாட்டின் சகலருக்கும் எமது சேவைகள் கிடைக்கும் விதத்தில் எமது நிர்வாகக் கட்டமைப்பு மிகவும் சிறப்பாகத் திட்டமிடப்பட்டுள்ளது.



## அம்பாறைப் பிராந்தியம்



மட்டக்களப்பு விற்பனை நிலையம்

பதியதலாவ விற்பனை நிலையம்

அம்பாறை பிராந்திய அலுவலகம்

அம்பாறை விற்பனை நிலையம்

அம்பாறை அரிமர ஆலை

அம்பாறை காட்சியறை



## அனுரதாபுரப் பிராந்தியம்



வவுனியா விற்பனை நிலையம்

மதவாச்சி விற்பனை நிலையம்

அனுராதபுரப் பிராந்திய அலுவலகம்

அனுராதபுர விற்பனை நிலையம்

தலாவ விற்பனை நிலையம்



## பண்டாரவளைப் பிராந்தியம்



பொரலந்த விற்பனை நிலையம்

பண்டாரவளைப் பிராந்திய நிலையம்

பண்டாரவளை அரிமர ஆலை



## கொழும்புப் பிராந்தியம்



நைனாமடம விற்பனை நிலையம்
மீரிகம விற்பனை நிலையம்
கடவத்தை விற்பனை நிலையம்
ஒருகொடவத்தை விற்பனை நிலையம்
கொழும்புப் பிராந்திய அலுவலகம்
பன்னிப்பிட்டி விற்பனை நிலையம்
பிலியந்தலை விற்பனை நிலையம்
கல்தமுல்லை புதிய விற்பனை நிலையம்
கல்தமுல்லை விற்பனை நிலையம்
கல்தமுல்லை அரிமர ஆலை
இரத்மலானை விற்பனை நிலையம்
இரத்மலானை காட்சியறை
இரத்மலானை அரிமர ஆலை
எகொடஉயன விற்பனை நிலையம்
மொறட்டுமல்ல விற்பனை நிலையம்
வில்லேதரவத்த விற்பனை நிலையம்



## யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம்



யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகம்
யாழ்ப்பாண விற்பனை நிலையம்
நல்லூர் விற்பனை நிலையம்
கிளிநொச்சி விற்பனை நிலையம்



## கண்டிப் பிராந்திய அலுவலகம்



தம்புளு ஓய விற்பனை நிலையம்
மாத்தளை விற்பனை நிலையம்
பல்லேகலே விற்பனை நிலையம்
கண்டிப் பிராந்திய அலுவலகம்
கண்டி காட்சியறை
நெலுந்தெனிய விற்பனை நிலையம்
எத்கல விற்பனை நிலையம்
எத்கல அரிமர ஆலை



## குருணாகலைப் பிராந்திய நிலையம்




## மொணறாகலைப் பிராந்தியம்




## மாத்தறைப் பிராந்தியம்



## நுவரெலியா பிராந்தியம்



ஹரஸ்பெத்த விற்பனை நிலையம்
கித்தல்கல விற்பனை நிலையம்
நுவரெலியா பிராந்திய அலுவலகம்
நுவரெலியா விற்பனை நிலையம்
கெப்பெட்டிபொல விற்பனை நிலையம்
கெப்பெட்டிபொல அரிமர ஆலை



## பொலன்னறுவைப் பிராந்தியம்



விலன்குளம விற்பனை நிலையம்
மின்னேரிய விற்பனை நிலையம்
ஹபறன விற்பனை நிலையம்
கதுருவெலை விற்பனை நிலையம்
பொலன்னறுவை பிராந்திய அலுவலகம



## இரத்தினப்புரிப் பிராந்தியம்



இரத்தினப்புரிப் பிராந்திய நிலையம்
இரத்தினப்புரி காட்சியறை
தேல்ல விற்பனை நிலையம்
தேல்ல அரிமர ஆலை
பேருவளை விற்பனை நிலையம்
மத்தகம புதிய விற்பனை நிலையம்
திம்பொல்கெட்டிய விற்பனை நிலையம்



## 2012 - 2013ஆம் வருடங்களில் உற்பத்தி, விற்பனை, வருமானம்

| | | உற்பத்தி அளவு | | விற்பனை அளவு | | மொத்த விற்பனை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2013 | 2012 | 2013 | 2012 | 2013 மி. ரூபா | 2012 மி. ரூபா |
| குற்றிகள் | க.மீ. | 106,122 | 132,859 | 96,560 | 118,679 | 1,770.8 | 1,867.4 |
| மரத்துண்டங்கள | க.மீ. | 4,117 | 4,955 | 2,487 | 3,323 | 166.9 | 201.4 |
| சிலிப்பர் கட்டைகள | அலகு | 73,526 | 117,306 | 64,938 | 111,019 | 443.8 | 729.0 |
| மின்கம்பங்கள் | அலகு | 31,887 | 30,469 | 29,413 | 37,094 | 208.6 | 255.5 |
| வேலிக் கம்பங்கள | அலகு | 131,774 | 203,511 | 145,051 | 192,224 | 87.7 | 62.9 |
| விறகு | க.மீ. | 85,156 | 104,316 | 86,922 | 110,412 | 8.9 | 8.5 |
| கம்பிக் கம்பங்கள் | அலகு | 88,685 | 79,608 | 83,927 | 86,728 | 2.7 | 5.0 |

## இலக்குகள் மற்றும் இலக்குகளை அடைதல் தொடர்பான மீளாய்வு மற்றும் கண்காணிப்பு

தலைவரின் தலைமைத்துவத்தின் கீழ் மற்றும் அனைத்து பிராந்திய முகாமையாளர்கள், கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட முகாமையாளர்களின் ஒத்துழைப்புடன் மாதாந்தம் முகாமைத்துவக் கூட்டங்கள் நடத்தப்படுவதுடன், அதில் உண்மையான செயற்படுதிறன், உற்பத்தி மற்றும் விற்பனை இலக்கு ஆகியவற்றுடன் ஒப்பிடப்பட்டு நோக்கப்படும். இக்கூட்டங்களில் அனைத்து தடைகளும் பிரச்சினைகளும் உரிய பிராந்திய முகாமையாளர்களுடன் கலந்துரையாடப்பட்டு இனங்காணப்படுவதுடன், அவை சம்பந்தமாக பல்வேறு தீர்மானங்கள் மற்றும் மாற்றீட்டு செயன்முறைகள் முன்மொழியப்பட்டு, பின்னர் அக்கருத்துக்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு செயற்படுத்தப்படும். மேலும், கூட்டுத்தாபனத்தின் இலக்குகள் மற்றும் இலக்குகளை அடைவதற்கான நெறிமுறைகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் பணப்பாய்ச்சல் ஆகியவற்றை அடைந்து நிதி சார் ஆற்றலமிகு நிறுவனமாக உறுதிப்படுத்தும் இலக்காக புது சந்தர்ப்பங்கள், புது கருத்துக்கள், மேற்கொள்ளவேண்டிய மாற்றங்கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்படும்.

பணிப்பாளர் சபைக்காக ஒப்பமிடப்பட்டது.



எஸ் அமரசிங்க
தலைவர்
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

# அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டியின் அறிக்கை 2013

## அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டியின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| திரு. ஏ.கே.ஏ.வை. தரங்க | - கமிட்டி தலைவர் |
| திரு. கே.பி. ஆரியதாச | - கமிட்டி உறுப்பினர் |
| கலாநிதி ஹிரான் அமரசேக்கர | - கமிட்டி உறுப்பினர் |

2013ஆம் ஆண்டிற்குரிய கீழ்வரும் விடயங்கள் உரிய கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டிருப்பதுடன், அவற்றில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பணிப்பாளர் சபையின் அனுமதிக்காக பரிந்துரைகளுடன் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. மாதாந்த நிதி மற்றும் பௌதிக செயலாற்றுகை
2. வருடாந்த கணக்குகள்
3. வருடாந்த பாதீடு மற்றும் திருத்தப்பட்ட பாதீடு
4. உள்ளக மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை
5. பணிக்குழாம் மற்றும் நிர்வாக விடயங்கள்
6. சட்ட நடவடிக்கைகள்
7. ஊழியர் கடன்கள், முற்பணம் மற்றும் விலைமனு கோரல்கள்

திரு. ஏ.கே.ஏ.வை. தரங்க
தலைவர் - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டி





# வியாபார நடவடிக்கைகளின் சுருக்கம்

# நிதி மற்றும் உற்பத்திச் செயலாற்றுகை

கடந்த அறிக்கையின் படி ஏழு வருட கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைப்பாட்டை பேணுவதற்கான நிதி நிலைமையை மேம்படுத்தல் தொடர்பான சுருக்கம்

ஏழு வருடங்களுள் நிதிச் செயலாற்றுகையின் சுருக்கத்தில் பணப்பாய்ச்சல், நிதி சார் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மூலதனச் செலவினங்கள், இலாபங்கள் என்பன அடங்கும். கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருக்கும் இலாபங்கள் மற்றும் செலவினங்கள் ஆகியவற்றைக் காட்டும் சுட்டிகள், முதலீட்டுத் திட்டங்கள், செயல் திட்டங்கள் என்பன பொருத்தமான நிதி கட்டுப்பாட்டுக்குள் அமைந்தன என்பதற்கு சான்று பகர்கின்றன. கடந்த வருடத்திற்குள் நிதிதொடர்பாக கிடைத்துள்ள முன்னேற்றம் மூலம் கூட்டுத்தாபனத்தின் நிலைப்பாடு மற்றும் உறுதிநிலை தொடர்பாக எதிர்காலத்திற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை உறுதிபடுத்தப்படுகின்றது. மேலும், நிதிப் பிரிவில் மற்றும் செயற்பாட்டுப் பிரிவில் அனைத்து நோக்கங்களையும் நிறைவேற்றிக்கொள்வதன் மூலம் நிறுவன ரீதியான திட்டத்தின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## வருமான வளரச்சிப் போக்குப் பகுப்பாய்வு

கூட்டப்பட்ட பெறுமானத்தில் வரியுடன் (ரூ ‘000)




கூட்டப்பட்ட பெறுமானத்தில் வரியின்றி (ரூ ‘000)




## இலாப வளர்ச்சிப் போக்குப் பகுப்பாய்வு

மொத்த இலாபம் (ரூ ’000)




வருமானம் மற்றும் திறைசேரி வரி செலுத்துவதற்கு முன்னரான தேறிய இலாபம் (ரூ ‘000)



## செயற்பாட்டு இலாபம் (ரூ '000)




| ஆண்டு | இலாபம் | வருமானத்தின் % |
|---|---|---|
| 2007 | 276,326 | 12% |
| 2008 | 441,067 | 16% |
| 2009 | 565,737 | 18% |
| 2010 | 615,230 | 19% |
| 2011 | 444,077 | 16% |
| 2012 | 583,994 | 18% |
| 2013 | 123,940 | 4% |

## உற்பத்தி வளர்ச்சியடையும் போக்குப் பகுப்பாய்வு

குற்றிகள் உற்பத்தி (க.மீ.)




மரத்துண்டங்கள் உற்பத்தி (க.மீ.)




சிலிப்பர் கட்டைகள் உற்பத்தி (க.மீ.)




மின்மாற்றிக் கம்பங்கள் உற்பத்தி (க.மீ.)



தளபாட உற்பத்தி (மில்லியன் ரூ.)




யானைவேலிக் கம்பங்கள் உற்பத்தி (க.மீ.)

டுவயடடரூ




## பெறுமதி கூட்டல்



## மூலதன முதலீடுகள் - 2013

| விபரம் | ரூபா |
|---|---|
| கல்தமுல்லைத் தொகுதி புதிய கட்டடம் | 67,589,386 |
| குற்றித்தூக்கி - குருணாகலை | 21,098,575 |
| குற்றித் தூக்கி - மொணறாகலை | 21,098,575 |
| மர அரிவாலை மற்றும் பதனிடும் புதிய கட்டடம் - பூசா தொகுதி | 18,287,693 |
| “டோசன்” குற்றித் தூக்கி - அனுராதபுரம் | 16,490,000 |
| கதிகாம புதிய உல்லாச பங்களா - மொணறாகலை | 14,564,948 |
| “வுட் மெக்” புதிய மரம் அரியும் இயந்திரம் - கண்டி | 6,913,958 |
| பட்டி வாள் மரம் அரியும் இயந்திரம் - இரத்தினபுரி | 6,913,958 |
| பிங்கர் பொயின்ட் இயந்திரம் -பூசா தளபாட உற்பத்தி நிலையம் | 5,527,634 |
| பட்டி வாள் இயந்திரம் - பூசா | 5,312,500 |
| அரிமரங்களை சேகரித்து வைக்கும் கட்டடம் ,எத்கால - கண்டி | 5,166,012 |
| அரிமரங்களை சேகரித்து வைக்கும் கட்டடம் ஒருகொடவத்த - கொழும்பு | 5,117,751 |
| கருத்தரங்கு மண்டபங்களை நவீனமயப்படத்தல் - தலைமை அலுவலகம் | 4,855,936 |
| அம்பாறை புதிய கட்டடம் | 4,451,018 |

## முதலீடுகள

| முதலீடுகள் | 31-12-2012<br>ரூபா | 31-12-2013<br>ரூபா |
|---|---|---|
| அரச நிறுவனங்களில் தற்காலிக மேலதிக நிதியக் கணக்கு | 298,546,189 | 338,010,495 |
| மக்கள் வங்கி | 724,072,649 | 811,508,552 |
| காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்தி செய்யும் சபை | 500,000 | 500,000 |
| இலங்கை வங்கி | 258,133,134 | 509,082,847 |
| அரச ஈட்டு, முதலீட்டு வங்கி | 73,924,940 | 81,474,846 |
| வரையறுக்கப்பட்ட லங்கா டிம்பர் பிலான்டேஷன் | 30,000,000 | 30,000,000 |
| மொத்தம | 1,385,176,912 | 1,770,576,740 |

# பத்தாண்டு கால தகவல்கள

(முழுமையான பெறுமானங்கள்)

| | | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முழு வருடாந்த வருமானம் | ரூபா.'000 | 1,274,323 | 1,529,079 | 2,106,155 | 2,531,611 | 2,986,925 | 3,445,141 | 3,616,164 | 3,103,744 | 3,563,390 | 3,213,547 |
| வருடாந்த மொத்த இலாபம் | ரூபா.'000 | 574,859 | 899,729 | 966,095 | 1,050,896 | 1,210,845 | 1,351,695 | 1,365,285 | 1,237,640 | 1,546,107 | 1,197,518 |
| வட்டி, வருமான வரிகளுக்கு முன்னர் தேறிய இலாபம் | ரூபா.'000 | 124,836 | 457,750 | 480,641 | 488,535 | 647,039 | 810,612 | 877,623 | 603,499 | 801,681 | 382,337 |
| மொத்த ஊழியர் ஆகுசெலவு | ரூபா.'000 | 488,212 | 596,684 | 774,751 | 841,831 | 852,879 | 898,652 | 901,910 | 953,498 | 1,065,052 | 1,117,036 |
| வருடாந்த மூலதனச் செலவினங்கள் | ரூபா.'000 | 5,013 | 2,051 | 13,523 | 95,745 | 141,327 | 112,909 | 237,332 | 180,546 | 162,509 | 332,870 |
| வருட இறுதியில் நடைமுறையற்ற சொத்துக்கள் | ரூபா.'000 | 953,611 | 1,372,833 | 1,579,613 | 1,338,570 | 1,523,553 | 1,793,467 | 1,801,988 | 1,739,893 | 1,479,880 | 1,658,535 |
| வருட இறுதியில் நடைமுறைச் சொத்துக்கள் | ரூபா.'000 | 911,048 | 852,622 | 962,569 | 1,545,428 | 1,407,022 | 2,079,543 | 2,341,020 | 2,177,892 | 2,929,185 | 3,153,777 |
| வருட இறுதியில் நடைமுறைப் பொறுப்புக்கள் | ரூபா.'000 | 162,762 | 285,475 | 528,005 | 690,558 | 455,460 | 1,028,979 | 1,034,258 | 497,229 | 804,102 | 1,050,258 |
| வருட இறுதியில் நடைமுறையற்ற பொறுப்புக்கள் | ரூபா.'000 | 271,066 | 285,339 | 341,581 | 370,816 | 362,399 | 364,553 | 399,057 | 399,953 | 409,030 | 384,831 |
| வருட இறுதியில் உரிமைப் பங்கு | ரூபா.'000 | 1,430,831 | 1,654,641 | 1,672,595 | 1,822,624 | 2,112,716 | 2,479,478 | 2,709,694 | 3,020,602 | 3,195,933 | 3,377,223 |
| ஒன்றிணைந்த நிதியத்திற்கான பங்களிப்பு | ரூபா.'000 | 37,000 | 50,000 | 75,000 | 150,000 | 75,000 | 50,000 | 413,490 | 75,000 | 600,000 | 50,000 |
| வருட இறுதியில் ஊழியர் எண்ணிக்கை | எண்ணிக்கை | 2,995 | 2,846 | 2,751 | 2,634 | 2,499 | 2,457 | 2,346 | 2,267 | 2,187 | 2,139 |
| வருட இறுதியில் மேலதிக நிதிய முதலீட்டு மீதி | ரூபா.'000 | - | 1,047,004 | 1,267,102 | 834,037 | 777,101 | 858,717 | 605,235 | 764,328 | 298,546 | 338,010 |

## பிரதான செயற்படு சுட்டிகள்

| | | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உரிமைப் பங்கிற்கான வருமான வரிக்கு முன்னர் தேறிய இலாபம் | % | 8.72 | 27.66 | 28.74 | 26.80 | 30.63 | 32.69 | 32.39 | 19.98 | 25.08 | 11.32 |
| மொ. சொத்துக்களுக்கான வட்டி, வரிக்கு முன்னர் தேறிய இலாபம் | % | 6.69 | 20.57 | 18.91 | 16.94 | 22.08 | 20.93 | 21.18 | 15.40 | 18.18 | 7.94 |
| நடைமுறை வீதம் | முறைகள | 5.60 | 2.99 | 1.82 | 2.24 | 3.09 | 2.02 | 2.26 | 4.38 | 3.64 | 3.00 |
| ஊழியர் ஒருவருக்கான ஊழியச் செலவு | ரூபா.'000 | 163 | 210 | 282 | 320 | 341 | 366 | 384 | 421 | 487 | 522 |
| உரிமைப்பங்கிற்கான சொத்துக்களின் வீதம் | முறைகள | 1.30 | 1.34 | 1.52 | 1.58 | 1.39 | 1.56 | 1.53 | 1.30 | 1.38 | 1.42 |
| சொத்துக்களின் மீதான பங்கிலாப வீதம் | % | 6.69 | 20.57 | 18.91 | 16.94 | 22.08 | 20.93 | 21.18 | 15.40 | 18.18 | 7.94 |
| மொத்த விற்பனை வளர்ச்சி | % | (10.16) | 19.99 | 37.74 | 20.20 | 17.99 | 15.34 | 4.96 | (14.17) | 14.81 | (9.82) |

முழு வருடாந்த வருமானம் (ரூ ‘000)




வட்டி மற்றும் வருமான வரிகளுக்கு முன்னர் தேறிய இலாபம் (ரூ ‘000)




வருட இறுதியில் மேலதிக நிதிய முதலீட்டு மீதி (ரூ ‘000)




நடைமுறை வீதம் (முறைகள்)




சொத்துக்களின் மீதான பங்கிலாப வீதம் %




உரிமைப்பங்கிற்கான சொத்துக்களின் வீதம் (முறைகள்).முமரு



# நீடித்து நிலைக்கும் எதிர்காலத்திற்காக ........

*" ஊழியர்கள் சமூகம் மற்றும் சூழல் ஆகியவற்றுடன் இணைந்து ஏற்படுத்திக்கொள்ளும் பிணைப்பு நீடித்து நிலைக்கும் எதிர்காலத்திற்கு வழிவகுக்கும்."*

நீடித்து நிலைக்கும் வியாபாரக் கருதுகோள் என்பது, ஏதேனும் ஒரு நிறுவனம் இலாபத்தை ஈட்டிக்கொண்டு சூழல் நேயம் மிக்கதாக தனது உற்பத்திகள் மற்றும் உற்பத்திச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் ஆகியவற்றை தற்கால சூழல் தேவைகளுக்கு ஏற்றவாறு மேற்கொள்வதாகும். மேலும், இது சூழலில் காணப்படும் வளங்களின் மூலம் உச்ச பயனைப் பெற்றுக் கொண்டு பொருட்களை உற்பத்தி செய்வதாகவும் குறிப்பிடலாம்.

இதனை மேலும் விபரிக்கையில், வியாபார நிறுவனமொன்று ஒழுக்க நெறிகளைப் பாதுகாத்துக் கொண்டு பொருளாதார வளர்ச்சியினை நோக்கி தொடர்டச்சியான அர்ப்பணிப்புடன், ஊழியர்களினதும் அவர்களது குடும்பங்களினதும் நிலையை உயர்த்தியவாறு உட்புற மற்றும் வெளிப்புற சமூககத்தின் உயர்வுக்காக பங்களிப்பதே நீடித்து நிலைக்கும் அபிவிருத்தியாகும். அதாவது, பொருட்கள் மற்றும் சேவைகள், ஊழியர்கள், சமூகம், சூழல் ஆகியவற்றுக்கு இடையிலான பரஸ்பர தொடர்ப்பினையும் எடுத்துக் காட்டும். அரசாங்க மரக்கூட்டுத்தாபனம் பொறுப்புமிக்க கூட்டுப் பிரஜையாக மக்களினதும், சமூக மற்றும் சுற்றாடல் அபிவிருத்திக்காக சமூக அபிவிர்தியில் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடிய பாதகமான செயற்பாடுகளற்ற பயணத்தினை மேற்கொள்வதே முக்கிய நோக்காகக் கொண்டுள்ளது.

வியாபார சூழலில் சமூகத்துடன் சினேகபூர்வமான தொடர்ப்பினைப் பேணுதல் மற்றும் உற்பத்திச் செயற்பாடுகிளன் பொது சூழலிற்கும் சமூகத்திற்கும் ஏற்படக்கூடிய பாதகமான தாக்கங்களைப் பொறுப்புடன் முகாமை செய்வதே அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் நோக்கமாகும். செயற்பாடுகளுக்கு இடையிலும் சமூக, பொருளாதார மற்றும் சூழல் காரணிகளுக்கு இடையிலும் உள்ள பிணைப்பு குறித்த எடுத்துக்காட்டுகளே அரசாங்க மரக்கூட்டுத்தாபனதின் செயற்பாடுகளினால் காட்டப்படுகின்றன. மீளாய்வாண்டின் போது அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் செயற்படுத்தப்பட்ட நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் தொடர்பான குறிப்பு கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது.



| | |
|---|---|
| பொருட்களும் சேவைகளும் | ▸ பொருட்களைப் பெற்றுக்கொள்ளுதல் முதல் அகற்றுதல் வரையில் நிலையான வழங்கல் செயற்தொடரொன்றைப் பயன்படுத்துதல்<br>▸ உயர்தரமிக்க பொருட்களையும் சேவைகளையும் வழங்குதல்<br>▸ முதலீடுகளை இடுதல் மற்றும் பயன்மிகு பலாபலன்களைப் பெறுதல் ஆகியவற்றுக்கு திட்டங்களைச் செயற்படுத்துதல்<br>▸ புது உற்பத்திகள் மற்றும் செயன்முறைகளை அறிமுகப்படுத்தல்<br>▸ வாடிக்கையாளர் மற்றும் வழங்குனர்களுக்கு இடையிலான கொடுக்கல் வாங்கல்களை நேர்மையாக மேற்கொள்ளுதல் |
| ஊழியர்கள் | ▸ பாதுகாப்பு முறைமைகள் மற்றும் கொள்கைகளை மேம்படுத்தல் மற்றும் செயற்படுத்துதல்<br>▸ தொடர்ச்சி மற்றும் பல்வகைத்தன்மை தொடர்பில் அர்ப்பணிப்பினை உற்சாகப்படுத்துதல்<br>▸ ஊழியர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள்<br>▸ ஊழியர் திருப்தியினை மேம்படுத்துதல்<br>▸ தொழில் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதன் மூலம் ஊழியர்கள் மற்றும் அவர்களில் தங்கியிருப்போரினைப் பாதுகாத்தல் |
| சூழல் | ▸ ஒழுங்குமுறைகளைப் பேணுவதற்கான முறைமைகள் மற்றும் கொள்கைகளை நிறுவுதல்<br>▸ சூழல் முகாமைத்துவம் மற்றும் வளங்களின் பாதுகாப்பு குறித்து விழிப்பூட்டல்<br>▸ சூழலில் ஏற்படக்கூடிய பாதகாமான தாக்கங்களைக் குறைத்தக் கொள்ளுதல்<br>▸ இயற்கை வளங்களினால் உச்ச அளவில் பிரயோசனம் பெறல் மற்றும் எதிர்கால பரம்பரையினருக்காகப் பாதுகாத்தல்<br>▸ குப்பைக் கூளங்களை அகற்றுவதை முகாமைப்படுத்துதல் |
| சமூகம் | ▸ பழைமை மிகு தளபாடங்கள் தொடர்பில் மக்களின் ஆர்வத்தைத் தூண்டுதல்<br>▸ அரிமரப் பாதுகாப்பு மற்றும் அரிமரக் கைத்தொழில் குறித்து மக்களுக்கு அறிவூட்டுதல |

## 1. பொருட்களும் சேவைகளும்

*“தறன்கள் மற்றும் தொழில்நுட்பம் மூலம் தரம் மிக்க பொருட்களையும் சேவைகளையும் சமூகத்திற்கு வழங்குவதற்காக நாங்கள் கடப்பாடுடன் இருக்கின்றோம்.”*

உறுதியான உற்பத்தி என்பது ஏதேனும் ஓர் உற்பத்தியின் முழுமையான ஆயுட்காலத்தினுள் அதன் செயற்பாடு சூழல் நேயம் மிக்கதாக இருப்பதாகும். அதாவது, மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுதல் முதல் முடிவுப் பொருட்களைப் பயன்படுத்தி அகற்றுதல் வரையில் எவ்விதத்திலும் நிரந்தரமானதொரு பாதிப்பு சூழலுக்கு ஏற்படாதிருத்தல் வேண்டும். தரம் மிக்க பொருட்களையும் சேவைகளையும் சமூகத்திற்கு வழங்குவதற்காக எமது திறன்களையும் தொழிலநுட்பத்தையும் முழுமையாக ஈடுபடுத்தியுள்ளோம். தற்கால தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு ஏதிர்கால பரம்பரையினருக்கும் அவர்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அவசியமான வளங்களைப் பாதுகாத்தவாறு பயன்படுத்துவதே நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி என அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் நம்புகின்றது.

### 1.1 பாரம்பரிய தளபாடப் பிரிவு

தற்காலத்தில் புதையுண்டு போகும் இலங்கையில் மரவேலைப்பாட்டுக் கலை மற்றும் பாரம்பரிய தளபாடங்கள் ஆகயிவற்றை சந்தையில் அறிமுகப்படுத்துவதன் மூலம் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் பாரம்பரிய தளபாடக் கலையின் முன்னோடியாக உள்ளது. பழைமை வாய்ந்த தளபாடங்களை அவற்றின் ஆரம்ப அமைப்பு மற்றும் தரம் ஆகயவற்றைப் பாதுகாத்து மீள்நிர்மாணம் செய்கின்றோம். பாரம்பரிய தளபாடங்களின் அழகு மற்றும் ஆக்கத்தன்மை குறித்து பொது மக்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு குறித்து அறிவுறுத்துதல் இதன் முக்கயிமான நோக்கமாகும்.

### 1.2 அரிமரத்தினால் உச்ச பயனைப் பெறுதல்

அரிமர விரயம் என்பது வளங்கள் உச்ச அளவில் பயன்படுத்தமை ஆகும். அரிமர விரயத்தினை சூழல் ரீதியாக நோக்குகையில் அது ஒரு பாரிய அழிவாகும். அதாவது, எஞ்சிய இயற்கை வளங்கள் அவற்றின் உச்ச பயனைப் பெறுவதற்கு ஈடுபடுத்தப்டாமை ஆகும். அதனால் அரிமர

உபயோகத்தின் போது உச்ச அளவில் பயனைப் பெறுவதற்கு அவசியமான நவீன தொழில்நுட்பம், நவீன உபாயங்கள், நவீன உபகரணங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தவதன் மூலம் வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துதல் தொடர்பில் எமது விசேட கவனத்தைச் செலுத்தியுள்ளோம்.

### 1.3 மிருவான அரிமரங்களுக்கான நீண்ட கால நிலைப்பாடு

தொழில்நுட்பத்தை உயர் நிலையில் பயன்படுத்தி அரமரங்களைப் பரிகரித்து மிருவான அரிமரங்களை சக்திமிக்கதாகவும் நீணடகாலம் நிலைக்கக்கூடியதாகவும் மாற்றி, அதிக விலை மற்றும் பெறுமதியில் கூடிய அரிமரப் பாவனைக்கு பரிகாரமாக சந்தைப்படுத்தப்படுவதுடன், அதன் மூலம் மரப் பாவனை உயரும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### 1.4 அரிமரங்களை இனங்காணல் மற்றும் உறுதிப்படுத்தும் சேவை

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஆய்வுப் பிரிவிற்கு அரிமரத்தின் தரம் மற்றும் அரிமரச் சொத்துக்களுக்கு சான்றிதழ் வழங்கும் அதிகாரம் 2008 பெப்ரவரி மாதம் 25ஆந் திகதிய 1538/7 ஆம் இலக்கத்தைக் கொண்ட விசேட வர்த்தமானி மூலம் வழங்கப்பட்டுள்ளது. உண்மையான நிறை, ஈரலிப்புத் தன்மை, உள்ளடக்கம், சுருங்குதல், போரோன் பரிகரிப்பு ஆகியவற்றுக்கான வசதிகள் இப்பிரிவில் உண்டு.

### 1.5 அரிமர தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்கள் வழங்கும் சேவைகள் மற்றும் அவற்றின் செயற்பாடுகள்

உன்ளகாய .ஞீமுன்யரட லன தளன நாட்டின் தரம்மிக்க மற்றும் நம்பிக்கைக்குரிய அரிமர மற்றும் அரிமரம் தொடர்பான உற்பத்திகளை வழங்கும் முதன்மையானோராக அர்ப்பணித்துள்ள முன்னோடித் தொழில் நிறுவனமான அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் மிக முக்கிய திருப்பு முனையாக 2006இல் இரத்மலானை கல்மெல்லையில் அரிமரத் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமொன்றினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தது. வன மற்றும் அரிமரத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவோரின் பணியினை வலுப்படுத்துவதன் மூலம் அவர்களது கொள்ளளவை மேம்படுத்துவதற்கும் அறிவினை இற்றைப்படுத்தவதற்கும் இலங்கையின் தேசிய அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் அர்மரத் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது.

## 2. ஊழியர்கள்

*“கூட்டுத்தாபனத்துடன் பின்னிப் பிணைந்துள்ள ஊழியர் குழுவினர் கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்தியிலும் வளர்ச்சியிலும் செல்வாக்குச் செலுத்தும் முக்கியமான காரணகருத்தாக்காளவர்”*

மனித வளம் என்பது ஓர் அமைப்பிற்குள் காணப்படும் மக்கள் மற்றும் பயன்மிகு உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தக் கூடிய அவர்களது வலு, அறிவு, ஆற்றல்கள், அனுபவங்கள் ஆகியவை ஆகும். மனித வளமானது ஒரு நிறுவனத்திற்கு தொடர்ச்சியாக நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கும் நிறுவனத்திற்குரிய பெறுமதிமிக்க வளமாகும். அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் உற்பத்தித் துறையில் முதன்மை வாய்ந்த நிறுவனமாக உற்பத்தி விளைபயன், வினைத்திறன், வாடிக்கையாளரை முதன்மைப்படுத்தல், ஆற்றல்களை விருத்தி செய்து கொள்ளல் போன்றன கூட்டுத்தாபனத்திற்கு போட்டிமிகு நன்மைகளைளப் பெற்றுக் கொள்வதற்கு பெரும் பங்களிப்பைச் செய்கின்றன. நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் ஊழியர்களை உயர் மட்டத்திற்கு கொண்டு செல்வதுடன், குறிப்பிடத்தக்க மட்டத்தில் ஊழியர்களையும் கூட்டுத்தாபனத்தையும் மிளிரச் செய்கின்றன. ஊழியர் தொடர்புகள் போன்று, ஊழியர்கள் கூட்டுத்தாபனம் குறித்து வைத்துள்ள ஈர்ப்பு அதிகரிக்கின்றமையால் நிறுவனமும் ஊழியர்களும் ஆகிய இரு தரப்பினரும் உயர்ந்த நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடிகிறது.

பலம்வாய்ந்த ஊழியர் தொடர்பு போன்று, ஊழியர்கள் கூட்டுத்தாபனம் குறித்து வைத்துள்ள ஈர்ப்பினை அதிகரிக்கச் செய்ய கீழ்வரும் உபாயங்களை கூட்டுத்தாபனம் கையாளுகின்றது.

- பலம் வாய்ந்த, நீடித்த நோக்கு மற்றும் உபாயங்கள் - உறுதிவாய்ந்த அபிவிருத்தியின் முக்கியத்துவமும் கூட்டுத்தாபனத்தின் எதிர்கால பயணவழி குறித்து நிலையான மற்றும் தெளிவான எண்ணக்கருவினை நிறுவனத்தின் ஊழியர்களுக்கு பெற்றுக் கொடுத்தல்
- உறுதிப்பாட்டினைக் குறித்து அறிவூட்டல் மற்றும் விளக்கம் ஆகியவற்றை விருத்தி செய்தல்
- நிறுவன ரீதியாகவும் உள்வாரியாகவும் ஊழியர் அர்ப்பணிப்பினைப் பேணுதல்
- வெற்றி - சாதகமான போட்டித்தன்மை, நன்மைகள் மற்றும் ஏற்றுக்கொள்ளல்

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| மொத்த ஊழியர் செலவு (மி.ரூ.) | 898.65 | 901.91 | 953.5 | 1065 | 1117 |
| மொத்த ஊழியர்கள் | 2457 | 2346 | 2267 | 2187 | 2139 |

### வயதெல்லையின் படி பகுப்பாய்வு

| வயதெல்லை | ஊழியர் எண்ணிக்கை |
|---|---|
| 18-25 | 27 |
| 26-35 | 313 |
| 34-40 | 431 |
| 41-45 | 324 |
| 46-50 | 291 |
| 51-55 | 436 |
| 55ற்கு மேல் | 317 |

### சேவை வகைப்படி ஊழியர் பகுப்பாய்வு

| சேவை வகை | ஊழியர் எண்ணிக்கை |
|---|---|
| சிரேஷ்ட முகாமையாளர் | 9 |
| மத்திய முகாமையாளர் | 64 |
| கனிஷ்ட முகாமையாளர் | 145 |
| முகாமைத்துவ உதவியாளர் - நிபுணத்துவமற்ற | 657 |
| முகாமைத்துவ உதவியாளர் - நிபுணத்துவமிக்க | 35 |
| ஆரம்பக் குழு | 1245 |
| சமயோசித மற்றும் பயிற்றப்பட்ட | 32 |

## ஆண் -பெண் பிரகாரம் ஊழியர் பகுப்பாய்வு

| ஆண் - பெண் | ஊழியர் எண்ணிக்கை |
|---|---|
| ஆண் | 1658 |
| பெண் | 481 |

## 2.1 ஊழியர் பாதுகாப்பு குறித்து கொள்கைகள் மற்றும் வழிமுறைகள்

1942, 45ஆம் இலக்க தொழிற்சாலைகள் அதிகாரச் சட்டம் மற்றும் 1934, 19ஆம் இலக்க ஊழியர் நஷ்டஈட்டு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் கீழ்குறிப்பிடப்படும் பாதுகாப்பு உபகரணங்கள் தமது ஊழியர்களுக்கு வழங்கப்பட்டன.

உபகரணங்கள்:- தலைக்கவசங்கள், சப்பாத்துக்கள், கையுறைகள், செவிப் பாதுகாப்புக் கவசங்கள், முகமூடிகள் போன்ற பாதுகாப்பு உபகரணங்கள்

இதற்கு மேலதிகமாக எதிர்வரும் ஆண்டிலிருந்து கூட்டுத்தாபனத்தால் பாதுகாப்புச் சீருடைகளையும் ஊழிர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.2 ஊழியர் பயிற்சி நிகழ்ச்சிகள்

கூட்டுத்தாபனம் பயிற்சி மற்றும் அபிவிருத்தி வாய்ப்புகளின் முக்கியத்துவத்தை இனங்கண்டுள்ளமையால், வருடாந்த வரவுசெலவில் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளுக்காக குறிப்பிட்டதொரு தொகையினை ஒதுக்குகின்றது. அது ஆகுசெலவாக அன்றி மானிட மூலதன அடிப்படையில் மேற்கொள்ளப்படும் முதலீடாகக் கூட்டுத்தாபனம் கருதுகின்றது. அவ்வாறான மானிய வளக் கொள்கைகள் மூலம் ஊழியர் அபிவிருத்திக்கு உந்துதல் வழங்கப்படுவதுடன், அது ஆற்றலற்ற ஊழியர்களுக்கு மாத்திரமன்றி ஆற்றல்மிக்க ஊழியர்களுக்கும் தமது ஆற்றல்களை மென்மேலும் விருத்திசெய்து கொள்ள முடிகிறது.

மானிட வள அபிவிருத்திக் கொள்கையின் படி, கூட்டுத்தாபனம நீண்ட காலமாக அதன் ஊழியர்களுக்கு பல்வேறுபட்ட பயிற்சி நிகழ்ச்சிகளைப் பெற்றுக் கொடுக்கின்றது. 2013ஆம் ஆண்டின் போது 277 ஊழியர்களுக்கு அரிமர தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி வழங்கப்பட்டது. மானிட வளக் கொள்கையின் படி, அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் பயிற்சி வாய்ப்புக்களை முகாமைத்துவ மட்டத்தில் உள்ள ஊழியர்களுக்கு மாத்திரமன்றி, தச்சர்கள், மெருகூட்டுவோர், கனரக வாகன இயக்குனர்கள் போன்ற ஏனைய ஊழியர்களுக்கும் கல்வி நிறுவனங்கள் பலவற்றினூடாக திறன், மனப்பாங்கு, அறிவு ஆகியவற்றை விருத்தி செய்து கொள்வதற்கும் அதன் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு உச்ச அளவிலான பங்களிப்பினைப் பெற்றுக்கொள்வதற்கும் வாய்ப்பினை வழங்குகின்றது.

கூட்டுத்தாபனம் பல்வேறுபட்ட பயிற்சி நிகழ்ச்சி வாய்ப்புக்களை கல்தெமுல்லை அரிமர தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் மற்றும் வெளிவாரி நிறுவனங்கள் மூலம் வழங்குகின்றது.

## 2013ஆம் அண்டின் போது அரிமர தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகள

| பாடநெறி | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|
| முகாமைத்துவ உதவியாளர் பயிற்சி | 62 |
| அரிவாள் தயாரிக்கும் பாடநெறிகள் | 21 |
| முகாமைத்தவ பயிலுனர்களை பயிற்றுவித்தல் | 30 |
| தொழிற்சாலை ஊழியர்களுக்கான தரக்கட்டுப்பாடு பயிற்சிப் பட்டறைகள் | 08 |

## வெளிவாரி கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள்

| பாடநெறி | பாடநெறி எண்ணிக்கை |
|---|---|
| கணினிகள் | 10 |
| வரி∴ மற்றும் நிதிக் கூற்றுக்கள் | 3 |
| பாதுகாப்பு | 1 |
| (Hydraulic) பயிற்சி நெறிகள் | 1 |
| Boiler பயிற்சி நெறிகள் | 1 |

## 2.3 மானிட வளப் பாவனை குறித்த கொள்கைகள் மற்றும் வழிமுறைகள

விருத்தி செய்யப்பட்ட சேவையினைப் பணிக்குழாத்தினருக்கு வழங்கும் நோக்கத்துடனேயே மானி வளக் கொள்கைகள் கையேடு செயற்படுத்தப்படுகின்றது. பின்வரும் முக்கிய மானிட வளச் சுட்டிகள் தொடர்பில் கொள்கை ரீதியிலான வழிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 2.3.1 ஊழியர் பதவி உயர்வுகள்

முறையான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட பதவி உயர்வுத் திட்டங்கள் கூட்டுத்தாபனத்தின் திறன்மிகு ஊழியர் அபிவிருத்திக்கு மற்றும் தக்க வைத்துக் கொள்வதற்கும் தொழில்நுட்ப ஆற்றல்கள், திறன்கள், செயலாற்றுகைகள் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதற்கும் வழிவகுக்கும்.

### 2.3.2 ஊழியர் இடமாற்றம்

வருடாந்த ஊழியர் இடமாற்ற வழிமுறைகள், விளைபயன்மிக்க வர்த்தக அபிவிருத்திக்குச் சாதகமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், இக்கொள்கைகளால் ஊழியர் மனக்குறைகளைஇனங் காண்பதற்கும் அவற்றை ஏழியர்களுக்கும் கூடடுத்தாபனத்திற்கும் நன்மையாக அமையக்கூடிய விதத்தில் தீர்ப்பதற்கும் இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளது.

### 2.3.3 தனிநபர் கடன்

இடர், சைக்கிள், தளபாட, இலத்திரனியல் உபகரணங்கள், கணினிகள்∴மடிக்கணினிகள், வாகனங்கள் கொள்வனவு செயயும் போது சலுகை அடிப்படையில் வட்டி வீதத்திலும் தமது தனிப்பட்ட தேவைகளுககாக துணிமணிகள், பண்டிகைக் கடன் என்பன வட்டி இல்லாமலும் தனிநபர் கடன்கள் வழங்கப்படும்.

### 2.3.4 மேலதிக நேர வேலை

கூட்டுத்தாபனத்தின் ஆகுசெலவு வினைத்திறன்கள் பிரகாரம் என்பதுடன் ஊழியர்களுக்கு கூடுதலான பயனைக் கொடுக்கும் விதத்தில் எமது மேலதிக நேர முறைமை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

### 2.3.5 மனக்குறைகளைக் கையாளுதல்

ஊழியர் மனக்குறைகளை நியாயமான முறையில் தீர்க்கும் நோக்கில் மனக்குறைகளைக் கையாளுதல் கொள்கை செய்படுத்தப்படுகின்றது. ஊழியர்களின் மனக்குறைகளைத் தீர்ப்பதற்கு கூட்டுத்தாபனம் பொதுவாகத் திறந்த கொள்கையொன்றைக் கடைப்பிடிக்கின்றது. அதன்படி ஊழியர்கள் எப்போதும் இம்மனக்குறைகளைக் கையாளும் முறைமைகளினால் பெரும் சௌகரியத்தை அனுபவிக்கலாம்.

### 2.3.6 மருத்தவக் காப்புறுதி

நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனம் ஒன்றினூடாக எமது ஊழியர்களுக்காக முழுமையான மருத்தவக் காப்புறுதித் திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றது. இம்மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் ஊழியர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் கீழ்வரும் விதத்தில் உள்ளடங்குவர்.

- ► தனிநபர் ஊழியர் (விவாகமாகாதவர்) மற்றும் தங்கியிருப்போராகப் பெற்றோர் அடங்குவர்.
- ► விவாகமான ஊழியர்களுக்கு தாரம் மற்றும் பிள்ளைகள் அடங்குவர்.

இத்திட்டத்தின் கீழ் மருத்துவமனையில் தங்கும் நன்மை, வெளிவாரி சிகிச்சைகள், சாதாரண மற்றும் திடீர் விபத்து இறப்பு, நிரந்தர ஊனமுறல் ஆகியவை உள்ளடங்குகின்றன. இக்காப்புறுதித் தொகுதிக்காகக் கூட்டுத்தாபனம் 2013ஆம் ஆண்டில் 45,435,277 ரூபா செலவிட்டது. ஊழியர்கள் இக்காப்புறுதிப் பக்கேஜினைப் பெற்றுக் கொள்ள முடியாது போயின், கூட்டுத்தாபனத்தினால் பெற்றுக் கொடுக்கபபடும் மருத்துவக் கொடுப்பனவு பக்கேஜினைப் பெற்றுக் கொள்ளலாம்.

### 2.3.7 தேநீர் மற்றும் பகலுணவுக் கொடுப்பனவு

கூட்டுத்தாபனத்தின் எல்லா ஊழியர்களுக்கும் 200 ரூபா நாளாந்த தேநீர் மற்றும் பகலுணவுக் கொடுப்பனவொன்று பெற்றுக் கொடுக்கப்படும்.

### 2.3.8 சப்பாத்துக் கொடுப்பனவு

கூட்டுத்தாபனத்தின் எல்லா ஊழியர்களுக்கும் 2,250 ரூபா வருடாந்த சப்பாத்துக் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

### 2.3.9 குளிர் கொடுப்பனவு

நுவரெலியா பிரதேசத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு விசேட காலநிலை காரணமாக அவர்களது அடிப்படைச் சம்பளத்தில் 10மூ குளிர் கொடுப்பனவாகச் செலுத்தப்படும்.

### 2.3.10 பேருந்துக் கட்டணம்

மாதாந்தம் ஊழியர்களின் நானாந்த பேருந்துக் கட்டணத்தில் அரைப்பங்கு செலுத்தப்படுகின்றது.

### 2.3.11 வருடாந்த கொடுப்பனவு

12,500 ரூபா வருடாந்த கொடுப்பனவொன்று எல்லா கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் வழங்கப்படும்.

## 2.4 ஊழியர் நிகழ்ச்சிகள்

ஊழியர்களின் தொழில் பாதுகாப்பு குறித்து கடப்பாடு கொண்டுள்ளதுடன், நாம் அவர்களை மதித்து நடக்கின்றோம். செயலாற்றுகை மற்றும் தொடர் செயற்பாடு மூலம் உயர் மட்டத்திலான திருப்தியினைப் பேணுவதை நாம் உணர்ந்துள்ளோம். அவ்வாறான நோக்கினை மனதிற் கொண்டு கீழ்வரும் விதத்தில் நிகழ்ச்சிகள் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

- ►வருடாந்த விளையாட்டு நிகழ்ச்சி ∴ புதுவருட நிகழ்ச்சி
- ► இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண நிகழ்ச்சிகள்
- ► ஊழியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் நிகழ்ச்சிகள்
- ► "சில" நிகழ்ச்சி மற்றும் தர்ம போதனை நிகழ்ச்சிகள்

## 2.5 ஏனைய சேவைகள்

- ► ஊழியர்களுக்காக சட்டபிரகாரம் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியவற்றுக்கு பங்களிப்புத் தொகைகளை வழங்குதல்
- ► பணிக்கொடைக் கொடுப்பனவுகள் சட்டபூர்வமான தேவையாகவன்றி ஊழியர்களின் நலனுக்காகவே செலுத்துவதாகக் கருதி செயற்படுதல்
- ► சமகால தேவையாகக் கருதி மகப்பேற்று கால விடுமுறை, பாலூட்டல் மணித்தியாலம் போன்ற சந்தர்ப்பங்களை அனுமதித்தல்
- ► நலன்புரி சேவையாக சிற்றுண்டிச்சாலை வசதிகளை ஏற்பாடு செய்தல்
- ► சலுகை விலை அடிப்படையில் கூட்டுத்தாபனத்தினால் பராமரிக்கப்படும் விடுமுறை பங்களா வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்

## 3. சுற்றாடல

"எமது அனைத்து செயற்பாடுகளையும் நிலைக்கத்தக்கதாகவும் சூழல் நேயமிக்கதாகவும் நடைமுறைப்படுத்தவதற்கு பொருத்தமான முறைமைகளையும் வழிமுறைகளையும் நிறுவுவதற்கு நாம் கடப்பாடு உள்ளவர்களாவோம்."

பாரதுரமான பொறுப்பினைக் கொண்ட நிறுவனமாக உறுதியான அபிவிருத்தியினூடாக சமூகத்திற்கு பங்களிப்பினை வழங்குவதே அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் நோக்கமாகும். சமூகப் பங்களிப்பு எனக் கருதப்படுவது ஏதேனும் சூழல் சார் நன்மை அல்லது முன்னேற்றம் எமது பொருட்களின் பாவனையினால் சமூகத்திற்கு கிடைக்குமா என்பதே சமூகப் பங்களிப்பு என்பதால் கருதப்படுகின்றது. நாளாந்த சவால்களுக்கு முகங் கொடுத்தவாறு மற்றும் போட்டிமிக்கதாக செயற்பட்டுக் கொண்டு ஆக்கபூர்வமான வியாபார நிறுவனமாக தனது பொறுப்பினை நிறுவனம் நன்கு நிறைவேற்றியுள்ளது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் மக்களின் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், உச்ச பங்களிப்பினை வழங்கியவாறு சமூகத்தில் உறுதியான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றது. வியாபார நடவடிக்கைகளை விருத்தி செய்யும போது சுற்றாடல் நேயமிக்க விடயங்களை செயற்படுத்துவதற்கான பொருத்தமான முறைமைகளையும் வழிமுறைகளையும் நிறுவுவதற்கு நாம் கடப்பாடு கொள்ளடவர்களாக உள்ளோம். அவ்வாறே சுற்றாடலில் ஏற்படக்கூடிய பாதிப்பு குறையும் வகையில் உறுதியான அபிவிருத்தியினை அடைந்து கொள்ளுதல் சமூகப் பொறுப்பினைக் கொண்ட நிறுவனமாக நாம் எமக்குள்ள பொறுப்பினை நன்கு புரிந்து வைத்துள்ளோம்.

### 3.1 சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் மரநடுகை நிகழ்ச்சிகள்

- உலக சுற்றாடல் தினத்தினை முன்னிட்டு நிகழ்ச்சிகள் பல நடாத்தப்பட்டன.
- "துரு ஜன" மாணவர் வங்கி, மரநடுகை நிகழ்ச்சி என்பன பயன்மிக்கதாக தொடர்ந்தும் செயற்படுத்தப்படுகின்றன. இனங்காணப்பட்ட பாடசாலைகளுக்கு பொருள் ரீதியான மற்றும் நிதி நன்கொடைகள் (நாற்றுகள், மண்வெட்டிகள், வீல்பெரோக்கள் போன்றன) வழங்கப்பட்டன. மேற்படி நிகழ்ச்சிகள் மூலம் வன நடுகைக் குறித்து இளம் சந்ததியினரின் ஆர்வம் மேம்படுத்தப்படுத்தப்பட்டது. இதன்மூலம் மர இனங்கள் குறித்து தெளிவான கருத்தினை வழங்குவதற்கும், அரிமரங்கள் முதிர்ச்சிப் பருவத்தை அடைநததும் சரியான முறையில் பயன்பாட்டினைப் பெற்றுக கொள்வதற்கும் வழியேற்படும்.
- "நாடடுக்கு நிழல்" நிகழ்ச்சியின் கீழ் 88,000 நாற்றுக்கள் பெற்றுக் கொடுப்பதன் மூலம் செயற்படு பங்களிப்பு





### 3.2 குப்பைக் கூளங்களை அகற்றும் முகாமைத்துவம்

சுற்றாடலுக்கு மிகவும் நேயமுள்ள அரசாங்க நிறுவனமொன்றாக அன்றாட குப்பைக்கூளங்களால் சூழல் பாதிப்படைவதைக் குறைக்கும் விதத்தில் முகாமை செய்யப்படுகின்றது. அவை கடுதாசி,பொலித்தீன், சேதனக் கழிவுகள் என வகைப்படுத்துவதால் வெவ்வேறாகச் சேகரித்து முறையாக அகற்றப்படுகின்றன. ஆண்வு நோக்கில் பயன்படுத்தப்படும் இரசாயனங்களும் நன்கு பாதுகாப்பான முறையில் முகாமைப்படுத்தப்படுவதுடன், அகற்றுவதைக் குறைத்துக் கொள்வதற்கும் ஏற்ொனவே நடவடிகடகை எடுக்கப்பட்டுள்ளது.

## 4. சமூகம

"சமூகத்துடன் அவர்களது வாழ்க்கைத் தரம் மற்றும் வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கும் நல்ல தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வதற்கும் ஆதரவு வழங்குவது கலாச்சாரம், வாழ்க்கை முறை ஆகியவை போன்று மரபுரிமைகள் பாதுகாக்கப்படும் முறையாகும்."

சமூகம் என்பது பொதுவான சம்பிரதாயங்களைக் கொண்ட பெறுமானங்கள், நிறுவகங்கள், ஒன்றுபட்ட செயற்பாடுகள், ஆர்வங்கள் ஆகியவற்றைக் கொண்ட ஓர் இனம், ஒரு சங்கம் அல்லது விரிவடைந்த ஒரு மக்கள் கூட்டம் எனக் கொள்ளலாம். சமூக ஒன்றிணைப்பை விருத்தி செய்வதற்காக கூட்டுத்தாபனம் மிகவும் முக்கியமானதொரு பொறுப்பினை நிறைவேற்றுவதுடன், கலாச்சார நிகழ்ச்சிகள், இளைஞர் செயற்பாடுகள், மாணவர் மற்றும் சமூக செயற்பாடுகள் போன்றன இதனுள் அடங்கும். சமூகத்துடன் அவர்களது வாழ்க்கைத் தரம் மற்றும் வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கும் நல்ல தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வதற்கும் ஆதரவு வழங்குவது கலாச்சாரம், வாழ்க்கை முறை ஆகியவை போன்று மரபுரிமைகள் பாதுகாக்கப்படும் முறையாகும்.

2013ஆம் ஆண்டின் பொது அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் சமூக நலனிற்காக நிறைவேற்றப்பட்ட விசேட நிகழ்ச்சிகள் பின்வருமாறு குறிப்பிடலாம்.

## 4.1 முகாமைத்துவ தினக்குறிப்பேடு - 2013 பொறுப்புமிக்க நிறுவனப் பிரஜை என்ற வகையில்,

எம்மால் 2013ஆம் ஆண்டில் முகாமைத்துவ தினக் குறிப் பேட் டினை, இலங் கையின் பழைமை வாய்ந்த மரத் தளபாடங்கள் என்ற தொனிப்பொருளின் கீழ் தளபாடங்களில் உள்ள அழகியற் கலை, புதுமைகள் மற்றும் பழைமை வாய்ந்த தயபாடங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்தவம் குறித்து மக்களை அறிவுறுத்தும் நோக் கில் அச் சிடுவதற் கு நடவடிக் கை எடுக்கப்பட்டது.

## 4.2 தேசத்தின் மகுடம் கல்வி மற்றும் வியாபாரக் கண்காட்சி

"தேசத்தின் மகுடம்" கல்வி மற்றும் வியாபாரக் கண்காட்சி அம்பாறை நகரத்தில் நடத்தப்பட்டதுடன், கூட்டுத்தாபனத்தின் கண்காட்சிக்கூடம் மனதைக் கொள் ளைக் கொள் ளும் பல் வகைப் பட் ட ஆக் கங் களைக் கொண் டிருந் ததுடன், பார்வையாளர்களுக்கு மகிழ்ச்சியை மாத்திரமன்றி கல் விசார் பெறுமானத் தையும் பெற் றுக் கொடுத்தது. மரக் கூட்டுத்தாபனத்தினால் மர அறுவடை முதல் முடிவுப் பொருள் உற்பத்தி வரையிலான படிகள் குறித்து ஒடடுமொத்த விளக்கத்தினை பார்வையாளருக்கு பெற்றுக் கொடுத்ததுடன், மர அரிவாலைகளின் மாதிரி, மரப் பதப்படுத்துகை மாதிரி, மரப் பாதுகாப்புப் பிரிவு போன்றவாறு அறிவு வழங்கப்பட்டது. இதன் மூலம் மரக் கைத்தொழில் பற்றி மக்கள் அறிவுறுத்தபபட்டதுடன், காணொளிகள், குறுந் திரைபடங்கள் போன்ற செவிப்புல உபகரணங்கள் மூலமும் கூட்டுத்தாபனத்தின் விசேட பணிகள் குறித்து மக்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

மேற்படி அனைத்து நிகழ்ச்சிகளின் மூலமும் மரக் கைத்தொழில் குறித்து மக்கள் மனதில் உள்ள பாதகமான சமூக மனப்பாங்குகளை மாற்றுவதும் உறுதியான சூழல் முகாமைத்துவத்தின் மூலம் இக்கைத்தொழிலின் எதிர்காலத்தினை மிளிரச் செய்வதுமே நாங்கள் நோக்காகக் கொண்டோம்.

## 4.3 கூட்டுத்தாபனத்தின் இலத்திரனியல் மற்றும் அச்சிடப்பட்ட வெளியீடுகள்

100ற்கும் அதிக அளவிலான அச்சிடப்பட்ட ஆவணங்கள் 2013ஆம் ஆண்டின் போது தொடர்ச்சியாக வெளியீடு செய்யப்பட்டன. விசேடமாக, விதுசர, வித்யா பிரபந்தய, விஜய ஆகிய பத்திரிகைகள் எமக்காக பெறுமதிமிக்க செய்தி ஆக்கங்களை வெளியிடுவதற்கு வாய்ப்புக்களை அளித்தன. விஜய பத்திரிகை 66 ஆக்கங்களை வெளியிட்டுள்ளதுடன், எல்லா அறிவித்தல்களிலும் வன நடுகைக் குறித்து தகவல்கள், பௌதிக மற்றும் இயந்திர மரச் சொத்துக்கள், மரப் பாகங்கள் தொடர்பிலான தகவல்கள் மற்றும் மரப் பயன்பாடு குறித்து தகவல்கள் பல அடங்குகின்றன. இவ்வாக்கங்களில் ஆய் வுப் பிரிவினால் மேற் கொள் ளப் பட் ட ஆய்வுகளின் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களும் உள்ளடங்குகின்றன.

பிரபல தொலைக்காட்சி அலைவரிசையான "நுலந" அலைவரிசை, சுவர்ணவாஹினீ, ஐ.ரீ. என். அலைவரிசைகள் ஆகியன கூட்டுத்தாபனம் சார்பாக உரையாடல்களை நிகழ்த்தவதற்கும் எமது உற்பத்திகள் குறித்து மக்களை அறிவூட்டுவதற்கும் வாய்ப்புக்களை வழங்கியுள்ளன.

## சன்மானங்கள் மற்றும் விசேட விருதுகள

(“எல்லா விதத்திலும் எமது அதி சிறந்த அர்ப்பணிப்பினை வெளிக்கொணர்வதால் நாம் சிறப்பிற்கு உரியவர்களாகின்றோம்.”)




தேசிய வணிக சபையினால் நடத்தப்பட்ட 2013 வியாபார சிறப்பு விருது வைபவத்தின் போது அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரசதுறை உற்பத்திக்காக வழங்கப்படும் சிறப்புத் தேர்ச்சி விருதினைச் சுவீகரித்துக் கொண்டது.






2009



2010




2011



2012



2009 2010 2011

தேசிய வணிக சபையினால் வழங்கப்படும் தங்கச் சன்மானங்கள் தொடர்ச்சியாக 2009, 2010, 2011 ஆகிய வருடங்களில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சுவீகரித்துக் கொண்டது.

ஹரித்த மெக்கோ விருது 2008 - இலங்கை ஊடகவியலாளர் சங்கம்

வன மற்றும் சூற்றாடல் கல்விக்கான மெக்கோ விருது 2010 - இலங்கை ஊடகவியலாளர் சங்கம்

2009 தேசத்தின் மகுடம் கண்காட்சியின் போது மிகவும் ஆக்கபூர்வமான கண்காட்சிக் கூடம்



# இடர் முகாமைத்துவம்

*“உற்பத்திச் செயன்முறை, உற்பத்திகள், புதிய நிர்மாணிப்புக்கள், விநியோகம், நிதி உள்ளடங்கலான எல்லா பிழரிவுகளிலும் இடர் முகாமைத்துவம் குறித்து எமது கவனத்தைத் தொடர்ந்தும் செலுத்துகின்றோம்”*

இடர்களை இனங்காணல், மதிப்பிடல் மற்றும் முதன்மைப்படுத்தல் ஒழுங்கின் படி கையாளுதலால் பல்வேறு நிகழ்வுகளினால் ஏற்படக்கூடிய இழப்பீடுகளைக் குறைத்துக்கொள்வதற்கு தேவையான வழிமுறைகளை மேற்கொள்ளுதல் இடர் முகாமைத்தவம் எனக் குறிப்பிடலாம். அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் உரிய முறையில் இடர் முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட்டு அதன் நோக்கம் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபடுகின்றது. துரிதமாக மாறும் தற்கால சூழலினுள் ஏற்படக்கூடிய இடர்களை முகாமை செய்வது எதிர்கால நிலைப்பாட்டுக்கான அத்தியாவசிய நடவடிக்கையாகும். இடர்களை முழுமையாக அகற்ற முடியாது. எனினும் அவற்றைக் குறைத்தக் கொள்ளலாம். அதனால் இடர்களைக் குறைத்தல் குறித்து கூடிய கவனத்தைச் செலுத்துவதற்கு கூட்டுத்தாபனம் பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டுள்ளது.

இடர் முகாமைத்துவ உபாயங்களை நிறுவுவதன் மூலம் இடர்களை இனங்காண்பதற்கு, மதிப்பிடுவதற்கு, முகாமை செய்வதற்கு அமைப்பு ரீதியான மற்றும் தெளிவான வழி கிடைக்கும். உற்பத்திச் செயன்முறை, உற்பத்தி, நிர்மாணிப்புக்கள், விநியோகம், நிதி ஆகியன உள்ளடங்கிய எல்லா பிரிவுகளிலும் இடர் முகாமைத்தவம் குறித்து எமது கவனத்தைச் செலுத்தியுள்ளோம். இடர் முகாமைத்தவ உபாய வழிகளை மேற்கொள்வதற்கு பின்வரும் மாதிரிப் படிவம் பயன்படுத்தப்படுகின்றது.

1. இடர்களை இனங்காணல்
2. இடர்களை பகுப்பாய்வு செய்தல்
3. கண்காணிப்பும் மீளாய்வும்
4. இடர்களைப் பரிகரித்தல் அழ்ளடனச

கூட்டுத்தாபனத்தினுள் குறிப்பிட்ட நேரத்தில் உரிய உபாய வழிகளை மேற்கொண்டு இடர் முகாமைத்தவத்துக்காக தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

## நிதிசார் இடர் முகாமைத்தவம்

| இடர்களை இனங்காணல் | நிறுவனத்தின் நோக்கம் | இடர்களுக்கான பரிகாரம் |
|---|---|---|
| 01.திரவத்தன்மை மற்றும் நிதி முகாமைத்தவம் | சாதகமான திரவத்தன்மை மட்டத்தினைப் பேணுதல். முறையான நிதித் திட்டங்கள் மற்றும் நிர்வாக அமைப்பினை நிறுவுதல் | உபாயவழிகள் - இடர்களைக் குறைத்தல்<br>பணப்பாய்ச்சல் எதிர்வுகூறல் மற்றும் போதியளவு காசு மற்றும் காசுக்கு சமமான சொத்துக்கள் நிலுவைகளைப் பேணுதல்<br><br>கூட்டுத்தாபனத்திற்குரிய தேவைப்படின், பிணையகப் பயன்படுத்தி எதிர்கால நிதிசார் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதுமான சொத்துக்களைப் பேணுதல்<br><br>கூட்டுத்தாபனத்தின் கொள்கை ரீதியான தீர்மானம் எடுத்தல் ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>முறையாகக் கடன்களை அறவிட்டுக் கொள்ளும் கொள்கை மூலம் அறவிட முடியாத கடன் மற்றும் கடன்பெற்றோர் மீதிகள் அதிகரிப்பதைத் தவிர்த்தல்<br><br>செலவுகளைக் கட்டுப்படுத்தவதற்காக பொருத்தமான அதிகாரங்களை நிறுவுதல் |

| | | |
|---|---|---|
| 02. வட்ட வீதத்தின் மீதான இடர் | வட்டி வீதம் மாற்றமடைவதால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ளுதல் | உபாய வழிகள் - இடர்களைக் குறைத்தக் கொள்ளுதல் வங்கியுடன் கலந்துரையாடி இணக்கமொன்றிற்கு உடன்பட்டு கூட்டுத்தாபனத்தின் முதலீடுகள் மீதான உயர் வட்டி வீதத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்<br><br>வழங்குனர்களிடமிருந்து வட்டியற்ற ஏதேனும் கால எல்லையின் கீழ் கடனுக்கு பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கும் அதன் மூலம் அதிக ஆகுசெலவு மற்றும் வட்டி வீதத்தினைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்<br><br>குறைந்த முடுக்கிவிடல் மட்டத்தினைப் பேணுதல்<br><br>பயன்மிக்கதான செயற்படு மூலதன முகாமைத்தவம்<br><br>நிதிசார் இடர் முகாமைத்துவ முறையினை நிறுவுதல் |

## வியாபார இடர் முகாமைத்துவம

| இடர்களை இனங்காணல்கள | நிறுவனத்தின் நோக்கம் | இடர்களைப் பரிகரித்தல் |
|---|---|---|
| 03. கடன் இடர் | கடன்பெற்றோரிடமிருந்து கடன்களை அறவிட்டுக் கொள்ள முடியாத இடரினைக் குறைத்துக் கொள்ளுதல் | உபாய வழிகள் - இடர்களைத் தவிர்த்தல்<br><br>ஐயப்பாடான கடன்களை வேறுபடுத்தல் மற்றும் விசாரணைக்காக கூட்டுத்தாபனத்தினால் முறையான கொள்கைகள் செயற்படுத்தப்படுகின்றன.<br><br>கடன்பெற்றோர் தொடர்பில் வருடாந்தம் அறவிட முடியாத மற்றும் ஐயப்பாடான கடன்களை வேறுபடுத்துதல் மேற்கொள்ளப்படும்.<br><br>பெரும்பாலும் பணம் மீது மாத்திரம் விற்பனைகளை மேற்கொள்வதற்கு கவனத்திற் கொள்வதுடன், கூட்டுத்தாபனத்தின் கடனுக்கு விற்பனை செய்தல் கொள்கையினைப் பின்பற்றியே கடனுக்கு விற்பனை செய்யப்படும்.<br><br>எல்லா கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கடன்பெற்றோர் மற்றும் கடன் கொடுத்தோர் கணக்குகள் குறித்து தொடர்ந்தும் கவனம் செலுத்தப்படுகின்றது.<br><br>பெரும்பாலும் தனி நபர்களுக்கு கடனுக்கு விற்பனை செய்யவதில்லை என்பதுடன், புது விற்பனை உபாய முறையொன்றாக அரச ஊழியர்களுக்கு மாத்திரம் சலுகை அடிப்படையிலான வட்டி வீதத்தில் பிரசாத அபிமானி திட்டத்தின் கீழ் பொருட்கள் கடனுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.<br><br>அரச நிறுவனங்களுக்கு மாத்திரம் கடனுக்கு விற்பனை நடைபெறும். பெரும்பாலும் தொதுத் திறைசேரிப் பரிமாற்றத்தின் கீழ் கணக்குகளைத் தீர்த்தல் மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>கூட்டுத்தாபன வாடிக்கையாளர்களின் கடன் தீர்க்கும் ஆற்றல் தொர்பில் மதிப்பீடு செய்யும் செயற்படு முறையொன்று எப்போதும் பின்பற்றப்படுவதுடன், வாடிக்கையாளருக்காக கடன் கொள்கைகளை நிறுவுதல் மேற்கொள்ளப்படுகின்றது. அடிக்கடி கண்காணிக்கக்கூடிய மற்றுமு் கடனை அறவிடும் கொள்கைகளை நிறுவுதல். |

| | | |
|---|---|---|
| 04. சொத்துக்கள் இடர் | சொத்துக்களினால் ஏற்படும் இழப்பீடுகளைக் குறைத்துக் கொள்ளல். அதாவது, விசேடமாக இயந்திரோபகரணங்கள் செயலிழத்தல், தீயினால், திடீர் விபத்தக்களினால், ஊழியர்களினால், கள்வர்கள், எதிரிகளால் சொத்தக்களுக்கு ஏறபடக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ளுதல். | உபாய வழிகள் - இடர்களைத் தவிர்த்துக் கொள்ளுதல்<br><br>எல்லா இடர் பிரிவுகளும் உள்ளடங்கும் விதத்தில் காப்புறுதிகளை சொத்துக்களுக்குப் பெற்றுக் கொள்ளல்.<br><br>திட்டமிடப்பட்ட பராமரிக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றின் கீழ் சொத்துக்களைப் பராமரிப்பதை மேற்கொள்ளல்.<br><br>சொத்துக்களின் எல்லா நடவடிக்கைகளுக்காகவும் விசேட அதிகார எல்லைகளும் உள்ளகக் கட்டுப்பாடுகளும் கொண்டிருத்தல். |
| 05. உள்ளகக் கட்டுப்பாடுகள் | முறையாக மற்றும் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பொன்றினை பேணுவதன் மூலம், கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் தற்போது காணப்படும் செயன்முறை மூலம் காணப்படும் குறைபாடுகள் மற்றும் அவற்றின் இடர்களைக் குறைத்துக் கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல். | உபாய வழிகள் - இடர்களைக் குறைத்தக் கொள்ளுதல்.<br>எப்போதும் கால அட்டவணைப் பிரகாரம் உரிய முறையில் உள்ளகக் கணக்காய்வுகளை மேற்கொள்ளுதல் தொடர்பில் உள்ளகக கணக்காய்வுப் பிரிவு அர்ப்பணிப்புடன் செயற்படுதல்.<br><br>அரச துறையில் விகாபார நிறுவனமாக பொருத்தமான நிர்வாக அமைப்பொன்றைப் பேணுதல். விசேடமாக பணஞ் செலுத்துதல்,வழங்குனர்களைத் தெரிவு செய்தல், ஊழியர்களை இணைத்துக் கொள்ளுதல் ஆகிய செயன்முறைகள் குறித்து கூடிய கவனஞ் செலுத்துதல்.<br><br>எல்லா நிதிசார் செயற்பாடுகளும் நிதிசார் சட்டதிட்டங்களுக்கு மற்றும் நடைமுறையில் இருக்கும் சட்டதிட்டங்களுக்கு அமைய மேற்கொள்ளப்படும். |
| 06. மனித வளம் | ஊழியர் மொத்த விற்பனையை ஆகக்குறைந்த மட்டத்தில் பேணுதல்<br><br>தடைகளின்றி செயற்படு நடவடிக்கைகளை வினைத்திறன்மிக்கதாக நிறைவேற்றுதல்<br><br>பயிற்சி பெறல் மற்றும் நல்ல முன்னேற்பாடுகள் மூலம் இயைபடைதல்<br><br>ஆற்றல்மிகு மற்றும் விளைபயன்மிக்க ஊழியர்களை கூட்டுத்தாபனத்தின் பால் ஈர்த்தல் மற்றும் கூடடுத்தாபனத்தினுள் தக்கவைத்தல்.<br><br>நன்கு வேலை செய்யக்கூடிய சூழலொன்றை நிறுவனத்தினுள் பேணுதல். | உபாய வழிகள் - இடர்களைத் தவிர்த்தல்<br><br>நன்கு மற்றும் சினேபூர்வமாக வேலை செய்யக்கூடிய சூழலொன்றை எல்லா ஊழியர் மட்டத்திலும் பேணுதல்<br><br>பல்வேறு விதத்தில் ஊழியர் நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தல்.<br><br>தேவையான சந்தர்ப்பங்களில் ஊழியர்களை விசேட மற்றும் பொதுப் பயிற்சி நெறிகளுக்கு அனுப்புதல்.<br><br>அரசாங்க நிறுவனமாக விசேட கொள்கைத் தொடரின் பிரகாரம் புது ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்யப்படும். |

**இடர் முகாமைத்துவம் என்பது கவனமாகச் செய்ய வேண்டிய ஒரு செயன்முறையாகும்.**

| | | |
|---|---|---|
| 07. தொழில்நுட்பம் மற்றும் உற்பத்திகளின் தரம் தொடர்பில் இடர் | நவீன தொழில்நுட்பம் மற்றும் தர நியமம் குறித்து கூடிய கவனஞ் செலுத்துவதன் மூலம் நிறுவனத்தினுள் பழைமையான முறைகளைப் பயன்படுத்தவதால் ஏற்படும் சிக்கல்களை இல்லாதொழித்தல்<br><br>பொருட்கள் மற்றும் சேவைகள் குறிப்பிட்ட தரத்துடன் காணப்படாமையைக் குறைத்துக் கொள்ளுதல்<br><br>உரிய சட்டதிட்டங்களின் பிரகாரம் திட்டங்களைச் செயற்படுத்துதல் | உபாய வழிகள் - இடர்களைத் தவிர்த்தல்<br><br>நீண்டகால திட்டங்களுக்கமைய பழைமை வாய்ந்த இயந்திரங்களுக்குப் பதிலாக புது இயந்திரங்களை உற்பத்திகளுக்குப் பயன்படுத்துதல்<br><br>எமது உற்பத்திகள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் உள்ளது என உரிய நிறுவனங்களிடமிருந்து சான்றிதழ் பெறுதல்.<br><br>ஆய்வு மற்றும் அபிவிருத்தி பிரிவின் மூலம் ஆய்வு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளுதல்.<br><br>உற்பத்தித் தரத்தினைப் பாதுகாத்தலுக்கு தேவையான ஆய்வு நடவடிக்கைகளுக்காக ஆய்வுகூட வசதிகளை வழங்குதல்.<br><br>வெளிவாரி மற்றும் உள்ளகக் கணக்காய்வுகளின் மூலம் அடிக்கடி விசாரித்தல். |
| 08. மொத்த இருப்பு முகாமைத்துவ இடர் | மொத்த இருப்பு இல்லாமலினால் ஏற்படக்கூடிய இழப்பைத் தவிர்த்தல்<br><br>மெதுவாக விற்பனையாகும் மொத்த இருப்புக்கள் சேர்வதால் ஏற்படும் இழப்பினைக் குறைத்துக் கொள்ளுதல்<br><br>பழைமை மிகு மொத்த இருப்புக்கள் சேர்வதால் ஏற்படும் இழப்பினைக் குறைத்துக் கொள்ளுதல்<br><br>தரங் குறைந்த மூலப் பொருட்கள் தொகையினைப் பெற்றுக்கொள்வதால் மற்றும் பயன்படுத்துவதால் ஏற்படும் இழப்பினைக் குறைத்துக் கொள்ளுதல்<br><br>இருப்புக்களை வைத்திருக்கும் ஆகுசெலவினைக் குறைத்துக் கொள்ளுதல் | உபாய வழிகள் - இடர்களைக் குறைத்துக் கொள்ளுதல்<br>மாதாந்த விற்பனை முன்னேற்பாடுகள் மற்றும் வருடாந்த வரவுசெலவுக்கு உட்படுத்தப்பட்ட உற்பத்தி இலக்குகள் குறித்து கவனத்திற் கொண்டு உற்பத்தித திட்டமிடல் கமிட்டி கூட்டத்தின் போது மாதாந்த உற்பத்தி இலக்குகள் தீர்மானிக்கப்படும்.<br><br>மெதுவாக விற்பனையாகும் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு பல்வேறு சந்தைப்படுத்தல் முறைகளைக் கையாளுதல். உதா.: □பிரசாத அபிமானி தளபாடக் கடன் திட்டம்□ போன்ற சந்தைப்படுத்தல் உபாயமுறைகள்<br><br>உற்பத்திச் செயன்முறைகள் பல்வேறு மட்டங்களில் தரப் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு முடிவுப்பொருட்களை வாடிக்கையாளரிடம் போய் சேரும் வரையில் தரத்தினை உறுதிப்படுத்துதல்.<br><br>உரிய நியமமற்ற உற்பத்திகளை வேறுபடுத்தி அவற்றினால் கூட்டுத்தாபனத்தின் நற்பெயருக்கு பங்கம் விளையாதவாறு விற்பனை செய்வதற்கோ அல்லது முறையாக அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுத்தல்.<br><br>அடிக்கடி மொத்த இருப்பினைப் பகுப்பாய்வு செய்து மெதுவாக விற்பனையாகும் மொத்த இருப்புக்களை இனங்கண்டு அவற்றினை வருமானம் ஈட்டுவதற்காக ஈடுபடுத்துதல்.<br><br>அடிக்கடி மொத்த இருப்புக்களை வைத்துக்கொண்டிருக்கும் காலம் குறித்து கவனத்திற் கொள்ளல்<br><br>காலத்திற்குக் காலம் பகுப்பாய்வு செய்து மெதுவாக விற்பனையாகும் மொத்த இருப்புக்களுக்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல். பொருத்தமான களஞ்சியசாலை வசதிகள் மற்றும் களஞ்சியப்படுத்தல் முறைகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்தல். |

| | | |
|---|---|---|
| 09. சந்தைப் போட்டித்தன்மை | தரங் குறைந்த இறக்குமதி செய்யப்பட்ட அரிமரம் மற்றும் மரத் தளபாடங்கள் காரணத்தால் சந்தைப் போட்டித்தன்மை உயர்வடைவதால் ஏற்படக்கூடிய சந்தைப் பங்கு குறைவடைதலைத் தவிர்த்தல்.<br><br>பிரதான உற்பத்திகளின் விற்பனை வருமானத்தினை அதிகரித்துக் கொள்ளுதல். (அதாவது, மரக் குற்றிகள், மரத்துண்டங்கள், சிலிப்பர் கட்டைகள், மின்கம்பங்கள், யானை வேலிக்கம்பங்கள் போன்றன)<br><br>நவீனமயப்படுத்தல் மூலம் சந்தைப் பங்கை அதிகரித்தல் | உபாய வழிகள் - இடர்களைக் குறைத்தல்.<br>காணப்படும் தரக்கட்டுப்பாடு நியமங்களின் பிரகாரம் உள்ளதா என எப்போதும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல்<br><br>பல்வேறு பத்திரிகை அறிவித்தல்கள் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சிகள் மூலம் மென்மேலும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் நற்பெயரை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்<br>▶ அரச ஊழியர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும் “பிரசாத அபிமானி” தளபாடக் கடன் திட்டடத்தின் கீழ் இரண்டு வருட காலக் கடனை மீளச் செலுத்தும் காலத்திற்கு ஏற்ப 10மூ வட்டி வீதத்தில் தளபாடங்களைப் பெற்றுக் கொடுத்தல்<br>▶ 2013ஆம் ஆண்டு தொடக்கம் கடனட்டை முறை மூலம் கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பித்தல் புதிய அரிமரக் களஞ்சியசாலை மற்றும் புதிய காட்சியறைகள் மற்றும் நவீனமயப்படுத்தப்பட்ட காட்சியறை வலையொன்றினை நாடு பூராகவும் ஏற்படுத்துதல்.<br><br>நவீனமயப்படுத்தலுக்காக ஆய்வுகளை மேற்கொள்வதுடன், புதுக் கருதுகோள்கள் நிறுவனத்தினுள் கொண்டு வருவதன் மூலம் வாடிக்கையாளர் ஈர்ப்பினை அதிகரித்துக் கொள்ளுதல்.<br><br>நச்தை ஆய்வுகளின் மூலம் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புக்களை இனங்காணல். |
| 10. மூலதன முதலீடுகள் | தற்போது மற்றும் எதிர்காலத்தில் திட்டமிடப்பட்டுள்ள முதலீடுகளினால் ஏற்படக் கூடிய இழப்புக்களைக் குறைத்தல் | உபாய வழிகள் - இடர்களைத் தவிர்த்தல்<br>சொத்துக்களில் முதலீடு செய்யும் போது உரிய முறையில் திட்டமிட்டு கூட்டுத்தாபனத்தின் வரவுசெலவு திட்டத்தின் படி செயலாற்றுதல்.<br><br>காணப்படும் எல்லா சொத்துக்களையும் உச்ச அளவில் பயன்படுத்துதல்.<br><br>மூலதன முதலீட்டுக் கொளகைகளைச் செயற்படுத்தும் போது அரசாங்கத் துறை வியாபாரம் என பொறுப்புடன் செயற்படுதல். |
| 11. தகவல் தொகுதி | சரியான தகவல்கள் இன்மை, தகவல்களின் பாதுகாப்புத் தன்மை, வன்பொருள், தொடர்பாடல் தொகுதி ஆகியவற்றுடன் பிணைந்திருக்கும் இடர்களைக் குறைத்தல்.<br><br>தொழில்நுட்பக் கொள்கைகளை அடிக்கடி இற்றைப்படுத்தி, புதிய தொழில்நுட்ப சூழலிற்கு பொருந்தும் வகையில் பேணுதல்.<br><br>கூட்டுத்தாபனத்தினுய் தகவல் பாதுகாப்பினை கணிப்பிடும் அளவீடுகளின் ஒருமைப்பாட்டினை மற்றும் நியமங்களுக்கு இணங்குகின்றமையை அடிக்கடி உறுதிப்படுத்திக் கொள்ளல். | உபாய வழிகள் - இடர்களைத் தவிர்த்துக் கொளளல்<br>எப்போதும் தகவல் தொழில்நுட்பக் கொள்கைகளுக்கு இணங்குதல்.<br><br>தரவுகளின் துணைப் பிரதிகளை அடிக்கடி ஒன்றுசேர்த்து வெளி இடங்களில் களஞ்சியப்படுத்துதல்.<br><br>முக்கயமான தரவு தொடர்பில் வன்பொருளின் மாதிரியொன்றை வைத்திருத்தல்.<br><br>பராமரித்தல் மற்றும் ஏனைய சேவைகள் குறித்து வழங்குனர்களுடன் வருடாந்தம் ஒப்பந்தம் செய்துகொள்ளல்.<br><br>தரவு வைரசுக்களை இனங்கண்டு இல்லாதொழிக்கும் பரிகார வைரசு மென்பொருள்கள், ஏனைய மென்பொருள்கள் ஆகியவற்றை உரிய காலத்தில் இற்றைப்படுத்தல். எப்போதும் இரகசிய குறியீடுகளைப் பயன்படுத்தவதற்கு ஆர்வமூட்டுவதன் மூலம் தரவுகளில் வெளி நபர்கள் அனுமதியின்றி உள்நுழைவதைத் தடுத்தல். |

| | | |
|---|---|---|
| 12. சூழல் | கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளினால் சூழலில் ஏற்படும் பாதகமான விளைவுகளைக் குறைத்தல்.<br><br>கூட்டுத்தாபனத்தின் சூழல் சார் கொள்கைகளுக்கு இணங்க செயற்படுதல். | உபாய வழிகள் - இடர்களைத் தவிர்த்தல்.<br>சூழல் சார் கொள்கைகளைத் தீர்மானிக்கும் நிறுவனங்களின் கொள்கைகளுக்கு இணங்குகின்றமையை உறுதிப்படுத்துதல்.<br><br>சுற்றாடல் நேயமிக்க தரப்பினருடன் சக்திமிக்க தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளல். |
| 13. சட்டங்களும் ஒழுங்கு விதிகளும் | சட்டங்களுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்காமையினால் ஏற்படும் இழப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளல்.<br><br>சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் மாற்றமடைவதால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை முன்கூட்டியே இனங்கண்டு கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ளல்.<br><br>சட்டரீதியான சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு வெற்றிகரமாக முகங் கொடுப்பதற்கான சக்திமிக்க, விளைபயன்மிக்க, நெகிழ்வுத்தன்மை கொண்ட அமைப்பொன்றை ஏற்படுத்துதல். | உபாய வழிகள் - இடர்களைத் தவிர்த்தல்.<br>சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைய செயற்படுதல்.<br><br>பணிப்பாளர்கள் மற்றும் உரிய அதிகாரிகளின் அறிவுறுத்தலின் படி செயற்படுதல்.<br><br>சட்டக்கொள்கைகளின் போக்கு குறித்து கண்காணிப்பு செய்தல். |
| 14. நற்பெயர | எமது நற்பெயருக்கு மற்றும் உற்பத்திகளின் தரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகளைத் தவிர்த்தல்.<br><br>செயற்பாட்டு வினைத்திறன், நிதிசார் நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை மூலம் ஆர்வமுள்ள தரப்பினருடன் சக்திமிக்க தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளல். | உபாய வழிகள் - இடர்களைக் குறைத்தல்.<br><br>வரவுசெலவு திட்டத்திற்குட்பட்ட இலக்குகளின் படி மாதாந்தம் வரவுசெலவு திட்ட இலக்குகளை அடையும் விதத்தில் செயற்படுதல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளுடன் பொருந்துகின்றதா என உறுதிப்படுத்திக் கொள்ளல்.<br><br>உற்பத்தித் தரம் மற்றும் நியமங்களுக்கு இணங்கலாள உள்ளது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல்.<br><br>ஆரவமுள்ள தரப்பினருடன், நல்ல விளைபயன்மிக்க தொடர்பாடல் முறை மூலம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளல்.<br><br>கூட்டுத்தாபனத்தின் நற்பெயரை மென்மேலும் மேம்படுத்துவதற்கு வெளி நிகழ்ச்சிகளைச் செயற்படுத்துதல்.<br>உதா.: மரநடுகை நிகழ்ச்சி |

**சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் போது மிகவும் கவனத்துடன் செயற்படுதல் வேண்டும்.**





# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ටීඑම්/අයි/එස්ටීසී/එෆ්/2013 | ඔබේ අංකය / உமது இல. / Your No. } | දිනය / திகதி / Date } 2015 පෙබරවාරි ෟ දින

සභාපති,
රාජ්‍ය දැව සංස්ථාව.

**රාජ්‍ය දැව සංස්ථාවේ 2013 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 1971 අංක 38 දරන මුදල් පනතේ 14(2) (සී) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව**

---

මගේ සමාංක හා 2014 නොවැම්බර් 12 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

ඩබ්ලිව්.පී.සී වික්‍රමරත්න
විගණකාධිපති (වැඩබලන)

පිටපත් - 1. ලේකම්, මහවැලි සංවර්ධන සහ පරිසර අමාත්‍යාංශය
2. ලේකම්, මුදල් අමාත්‍යාංශය

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

මගේ අංකය
எனது இல. } ரீஎம்/ஐ/எஸ்ரீசீ/எஏ/2013
My No.

ඔබේ අංකය
உமது இல. }
Your No.

දිනය
திகதி } 2014 நவம்பர் 12
Date

தலைவர்,

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

**அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 29 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை ஒன்று கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு 2014 மே 19 ஆந் திகதி வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றைத் தீர்மானித்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 16

i. ரூபா 794,855,634 கிரயமான மீளாய்வாண்டின் இறுதியில் தேறிய பெறுமதி ரூபா 83,525 ஆன 6,705 சொத்து விடயங்கள் மற்றும் ஆண்டின் இறுதியில் பூச்சியப் பெறுமதியாகக் காண்பிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தினால் மேலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கின்ற ரூபா 5,827,394 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள் கணிப்பீடு செய்யப்பட்டு

கணக்குகளுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. நிலையான சொத்துக்கள் தொடர்பாக கடைப்பிடிக்கப்படுகின்ற பெறுமானத் தேய்வு முறை ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியின் போதும் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் அதற்குக் கிடைக்கின்ற பொருளாதார நலன்களில் கவனத்திற் கொள்ளக்கூடிய வேறுபாடுகள் காணப்படுமாயின் அந்த நலன்களை வெளிப்படுத்தக் கூடிய வகையில் பெறுமானத் தேய்வு முறை மாற்றப்பட வேண்டும். எவ்வாறாயினும் கூட்டுத்தாபனம் அந்த நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

iii. ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள் கணிப்பீடு செய்யும் போது அந்த சொத்துக்களின் வகுப்புக்கள் யாவும் மீள் கணிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து கையேற்கப்பட்ட சகல காணியும் மீள்கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 37

---

பொறுப்பு அளவினை உரியவாறு மதிப்பீடு செய்யக்கூடியதாக இருக்கும் போது பொறுப்புக்களுக்கு உரியவாறு நிகழத்தக்க பொறுப்புகளுக்கான ஒதுக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஒரு உத்தியோகத்தர் குற்றங்களில் இருந்து அவர் நிரபராதியானமையினால் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டியேற்பட்ட ரூபா 1,957,174 தொகையான நிலுவைச் சம்பளத்திற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 40

---

கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தின் ஒரு பகுதி வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் (2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டிடத்தின் தேறிய பெறுமதி ரூபா 5 ஆனமையால்) வாடகை உழைக்கப்படும் பகுதி மற்றும் கூட்டுத்தாபனத்தினால் பாவனைக்கு எடுக்கப்படும் பகுதி என்பன

தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டு முறையே முதலீட்டுச் சொத்துக்கள் மற்றும் ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்கு மீதிகள் மற்றும் அதற்குரிய பட்டோலைகள் என்பவற்றை இணக்கஞ்செய்த போது பின்வரும் வேறுபாடுகளைக் காணக்கூடியதாக இருந்தது.

| விபரம் | கணக்கின் பிரகாரம் மீதி | பட்டோலையின் பிரகாரம் மீதி | வேறுபாடு அதிகரிப்பு/ (குறைவு) |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கல்தெமுல்ல இயந்திரப் பொறியியல் பிரிவு | | | |
| இருப்பு மற்றும் உதிரிப்பாகக் கணக்கு | 20,796,319 | 20,689,413 | 106,906 |
| பூஸ்ஸ தளபாடப் பொருள் கட்டிடத் தொகுதி | | | |
| ஓய்வூதியப் பணிக்கொடை ஒதுக்கீடுகள் | 3,973,635 | 3,734,080 | 239,555 |
| பூஸ்ஸ மரக் கட்டிடத் தொகுதி | | | |
| ஓய்வூதியப் பணிக்கொடை ஒதுக்கீடுகள் | 11,133,346 | 12,015,148 | (881,802) |

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டின் இறுதியில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய உரிமை மூலதனப்பங்கு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 661,562,629 ஆக இருந்த போதிலும் அத் திணைக்களத்தின் அறிக்கையின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திலிருந்து கிடைக்க வேண்டிய உரிமை மூலதனப்பங்கு ரூபா 706,610,518 ஆனமையால் ரூபா 45,047,889 வேறுபாட்டிற்கான காரணம் கணக்காய்விற்கு விளக்கப்படவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மெற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிரமாபிமானி கூட்டத்திற்காக சமுகமளித்த ஊழியர்களுக்கு உணவு மற்றும் ரீசேர்ட்களுக்காக செய்யப்பட்ட ரூபா 1,100,000 தொகையான செலவினத்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செல்லக்கதிர்காமம் சுற்றுலா விடுதியை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் முதலாவது மேலதிக வேலைக்காகவும் இரண்டாவது மேலதிக வேலைக்காகவும் முறையே ரூபா 743,295 தொகையும் ரூபா 1,113,062 தொகையும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அளவிடைகள், வேலை அறிக்கை அல்லது பட்டியல்கள் எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு

செல்லக்கதிர்காமம் சுற்றுலா விடுதியை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்காகக் கொடுப்பனவு செய்யும் போது உள்ளபடியான செலவினத்தை விஞ்சி ரூபா 2,174,394 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய கணக்குகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வியாபாரக் கடன்பட்டோர் ரூபா 475,392,716 ஆகும். இதில் ரூபா 12,442,454 தொகை 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தையும், ரூபா 5,105,542 தொகை 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தையும், ரூபா 45,134,668 தொகை 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தையும் உடைய பழைய கடன் மீதிகளாகும்.

(ஆ) 2009 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து அரசாங்கத் திணைக்களத்திலிருந்து அறவிட வேண்டிய ரூபா 568,500 தொகை மற்றும் 1983 ஆம் ஆண்டு முதல் தனியார் கம்பனியிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 11,873,954 தொகை என்பன 2014 ஆகஸ்ட் இறுதி வரையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இந்த கடன் அறவிடலின் இயலுமையும் நிச்சயமற்றதாக இருந்தது.

(இ) 35 அரசாங்க நிறுவனங்களிலிருந்து 1 தொடக்கம் 2 வருடங்கள் வரையான காலம் முதல் அறவிடவேண்டியிருந்த கடனின் அளவு ரூபா 48,830,545 ஆக இருந்ததுடன் தனியார் நிறுவனமொன்றிலிருந்து 2012 ஆம் ஆண்டு முதல் அறவிட வேண்டியிருந்த கடன் மீதி ரூபா 108,329 ஆகவும் இருந்தது.

(ஈ) 2010 மார்ச் 2012 ஆம் ஆண்டுகளின் போது அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்கப்பட்ட பெறுமதி முறையே ரூபா 1,780,932 தொகை மற்றும் ரூபா 3,877,002 ஆக இருந்ததுடன் அதற்காக திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பிரசாத அபிமானி என்ற பெயருடைய திட்டத்தின் கீழ் அரசாங்க ஊழியர்கள் கடன் அடிப்படையில் மரத்தளபாடங்களைப் பெற்ற 27

உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 693,435 தொகையான கடன் 1 தொடக்கம் 4 வருடங்கள் வரையான காலம் முதல் அசைவுறாத மீதியாகக் காணப்பட்டதுடன் அந்த கடன் மீதியை உரிய தரப்பினர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 7 பிரதேச வாசிகளுக்குரிய 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 555,346 தொகையான நானாவித கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மரம் வழங்குனர்களுக்குச் செலுத்தப்பட்ட முற்பணத்தொகை களஞ்சிய வழங்கல் பூர்த்திசெய்யப்பட்டு இறுதிக்கொடுப்பனவு செய்யும் போது கழிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையினால் 3 பிரதேச வாசிகளுக்குரிய 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்திற்காக ரூபா 1,358,192 தொகை மேலும் அறவிடவேண்டியிருந்தது.

(ஏ) கூட்டுத்தாபனத்தினால் 1988 ஆம் ஆண்டின் போது கதிர்காமம் அஸ்டபல நிதியத்திற்கு ரூபா 2,000,000 தொகை வட்டியின்றிய கடன்தொகை வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 38,000 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 1,037,000 தொகை அறவிடவேண்டியிருந்தது.

வியாபாரக் கடன்தொடுத்தோர் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய கணக்குகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் வன சீவராசிகள் திணைக்களத்திற்கும் வனப்பாதுகாப்புத் திணைக்களத்திற்கும் செலுத்த வேண்டிய உரிமை மூலதனப்பங்குப் பணம் முறையே ரூபா 335,619 தொகை மற்றும் ரூபா 661,562,629 ஆக இருந்ததுடன் அத்தொகையை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 01 தொடக்கம் 05 வருடங்கள் வரையான காலம் முதல் மீளச்செலுத்த வேண்டிய ரூபா 6,565,130 தொகையான கேள்வி வைப்புக்கள் மற்றும் ரூபா 12,508,011 தொகையான பாதுகாப்பு வைப்புக்களின் பொறுப்புக்காலம் கடந்திருந்த வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கோ அல்லது உரிய பொறுப்பை விடுவிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்வேறு வழங்கல்கள் மற்றும் நிர்மாணப் பூர்த்தியின் போது பிடித்துவைக்கப்பட்ட ரூபா 4,674,305 தொகையான வைப்புப் பணத்தில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட பழைய மீதி உள்ளடங்கியிருந்ததுடன் அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஒரு வருடத்திற்கு மேற்பட்ட பழைய கென்க்னேல் வைப்பு ரூபா 2,295,360 தொகையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 104(3) | முன்னைய ஆண்டுகளிலும் மீளாய்வாண்டின் போதும் ஏற்பட்ட 07 விபத்துக்களுக்குரிய பொது 283 படிவம் மூலம் அறிக்கை சமர்ப்பிப்பதில் நீண்ட தாமதம் அவதானிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 104(4) | 3 வாகன விபத்துக்கள் தொடர்பாக பூரண அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 110 | நட்டம் மற்றும் இழப்பு பதிவேடு கணக்காய்வுத் திகதியான 2014 யூலை 31 வரையிலும் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 571(2) | பொருள் வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களினால் வைப்புச் செய்யப்பட்டு 2 வருடங்களை விஞ்சிய ரூபா 3,319,300 வைப்புக்கள் தொடர்பாக இந்த பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவு மற்றும் 1997 மே 23 ஆந் திகதிய 118(அ) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம்

தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் 2013 ஆம் ஆண்டு சனவரி முதல் யூன் வரை மரக்கூட்டுத்தாபனத்தின் எட்டு (08) பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு 1/20 படியொன்று ரூபா 227,256 தொகை "கருணை உதவிக்கொடுப்பனவு" ஆக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) தேசிய கொள்வனவு முகவராண்மையின் 2007 இன் ஆலோசனைச் சேவை கைநூல்

| | | |
|---|---|---|
| (i) | 2.2.1 ஆம் பிரிவு | ஆலோசனை நிறுவனத்தைத் தெரிவு செய்வதற்கு நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப |

மற்றும் மதிப்பீட்டுக்குழு உரிய வரிசை அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் உரிய குழுவை நியமிக்கும் போது இந்த ஆலோசனை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) 2.6.3 ஆம் பிரிவு

ஆலோசனைச் சேவை நிறுவனத்தைத் தெரிவு செய்யும் போதும் குழு உருவாக்கப்படும் போதும் கூட்டுத்தாபனம் இந்தப்பிரிவின் ஆலோசனையின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவை

---

(i) 2.8.1 ஆம் பிரிவு

கொள்வனவு நடவடிக்கைகளின் போதும் நிர்மாண ஒப்பந்தக்களுக்காகவும் கேள்வி கோருவதற்கு முன்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கேள்வி கோரி கூறு விலைகள் பெற்றதன் பின்னர் கூட்டுத்தாபனத்தினால் மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2.8.4 ஆம் பிரிவு

i. அதிகளவான பெறுமதியுடன் தொழில்நுட்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் போது அது தொடர்பாக நிபுணத்துவ அறிவுடைய வெளிநபர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்காக நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறான நபர் ஒருவர் குழுவிற்காக நியமிக்கப்பட்டிருக்க வில்லை.

ii. கொள்வனவு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் இருக்க வேண்டிய ஆகக்கூடிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை 05 ஆக இருந்த போதிலும் கொள்வனவு நடவடிக்கைகளின் போது அந்த எல்லையினை விஞ்சி பங்குபற்றிய அங்கத்தவர்களுக்காக ரூபா 26,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள்

i. சுற்றுநிருப ஆலோசனைகளுக்கு முரணாக கூட்டுத்தாபனத்தின் 16 உயர் முகாமைத்துவ உத்தியோகத்தர்களுக்காக சம்பள அதிகரிப்பு வழங்கும் போது 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் ரூபா 398,320 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட சம்பள அதிகரிப்புக்களின் கூட்டுப்பெறுமதியின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட ரூபா 19,916 தொகையான 5 சதவீத விஷேட படியும் ரூபா 59,748 தொகையான 15 சதவீத படியும் செலுத்தப்பட்டிருந்தன.

ii. இரண்டு உத்தியோகத்தர்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி திறமையின் அடிப்படையில் சம்பள அதிகரிப்பு வழங்கி அதற்காக ரூபா 368,200 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் இறுதியின் போது நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய இலாபம் ரூபா 339,127,677 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 201,681,308 ஆனமையால் தேறிய இலாபத்தில் ரூபா 137,446,369 அதிகரிப்பைக் காண்பித்தது. மீளாய்வாண்டின் போது திறைசேரிக்குச் செலுத்தப்பட்ட கட்டணம் (Levy) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 550 மில்லியனால் குறைவடைந்திருந்தமை வரிக்கு முன்னரான தேறிய இலாப அதிகரிப்பிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

### 3.2 விரிவான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் உள்ளபடியான செயற்படு மற்றும் திரவ விகிதங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | | 2013 | 2012 |
|---|---|---|---|---|
| | | | சதவீதம் | சதவீதம் |
| (அ) | செயற்படு விகிதம் | | | |
| | மொத்த இலாப விகிதம் | சதவீதம் | 41.38 | 47.29 |
| | தேறிய இலாப விகிதம் | சதவீதம் | 11.48 | 6.17 |
| (ஆ) | திரவ விகிதம் | | | |
| | நடைமுறை விகிதம் | | 3:1 | 3.74:1 |
| | விரைவு விகிதம் | | 2.06:1 | 2.75:1 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொது மீளாய்வாண்டின் விற்பனைப் புரள்வு 11.5 சதவீதத்தினாலும் மொத்த இலாப விகிதம் 5.91 சதவீத்தினாலும் குறைவடைந்திருந்தது.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஏனைய செயற்பாட்டு வருமானம் 19.28 சதவீதத்தினால் குறைவடைந்திருந்த போதிலும் திறைசேரிக்குச் செலுத்திய கட்டணம் 91.67 சதவீத்தினால் குறைவடைந்திருந்தமையினால் தேறிய இலாப விகிதம் 5.31 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. திறைசேரிக்குச் செலுத்திய கட்டணம் கணிசமான அளவு குறைவடைந்ததன் காரணமாக முன்னைய ஆண்டின் போது 6.17 சதவீதமாக இருந்த தேறிய இலாப விகிதம் மீளாய்வாண்டின் போது 11.48 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தினால் அரிந்த மரவிற்பனையிலிருந்தும் சிலிப்பர் விற்பனையிலிருந்தும் முறையே ரூபா 429 மில்லியன் தொகை மற்றும் ரூபா 825 மில்லியன் ஆக ரூபா 1,254 கூட்டுத்தொகையான விற்பனை வருமானத்தை உழைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான விற்பனை வருமானம் ரூபா 623 மில்லியன் அதாவது திட்டமிடப்பட்ட வருமானத்தில் 50.3 சதவீதமாக மாத்திரம் இருந்தது. கூட்டுத்தாபனத்தினால் மாற்று வழிகளில் விற்பனை நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாமையைப் போலவே சிறந்த அடிப்படையின்றி மதிப்பீடு தயாரிக்கப்பட்டமையும் இந்த நிலைமைக்கு அடிப்படையாகத் தாக்கமளித்திருந்தது.

### 4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

(அ) இறம்புக்கன் ஓயா நீர்த் தேக்கத்திற்குள் தாழ்வடையும் நிலத்தில் மரங்களை அகற்றும் போது நல்ல நிலையில் காணப்படுகின்ற மரங்கள் இரண்டாம் தரத்தில் அல்லது அதிலும் குறைந்த தர மரங்களாக வகைப்படுத்தப்பட்டு “மங்சல” விற்பனைக்காக குறைந்த விலையின் கீழ் விற்பனை செய்தல் மற்றும் இறம்புக்கன் ஓயா செயற்திட்டம்

அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்கு வெளியே மரங்களை வெட்டுதலின் மூலம் மேற்கொள்ளப்பட்ட மோசடிகள் மற்றும் வனக் குற்றங்களின் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 35,169,565 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஒப்பந்தக்காரர்கள் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மரக் களஞ்சியத்திற்கு வழங்காமை, ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எழுத்துமூல கோரிக்கையின்றி சில சந்தர்ப்பங்களில் உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு முரணாக ஒப்பந்தக் காரர்களின் கோரிக்கையின் அடிப்படையிலும் "மங்சல" விலை வீழ்ச்சியடைந்தமை மற்றும் கூட்டுத்தாபன களஞ்சியங்களுக்கு வழங்க வேண்டிய இரண்டாம் வகுப்பின் உயர்ந்த மற்றும் விஷேட தரங்களில் மரங்களின் "மங்சல" விற்பனைக்கான மரங்களாக வகைப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டமை இந்த மோசடிகளுக்கு அடிப்படைக் காரணமாக இருந்தது.

(ii) உதவி முகாமையாளர் மற்றும் முகாமையாளர் (அம்பாறை) போன்ற உத்தியோகத்தர்களினால் ஒப்பந்தக்காரர்களுக்கு சாதகமான முறையில் பிழையான விலைக் குறைப்பு சிபார்சில் தலைமை அலுவலக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த பிழையான சிபார்சினால் தலைமை அலுவல உத்தியோகத்தர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட காரணத்தினால் நல்ல நிலையிலுள்ள மரங்கள் குறைந்த விலையின் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டிருந்தன.

(iii) பிரதி பொது முகாமையாளர் செயற்பாடுகள் சிபார்சு செய்ததன் படி, வேலைத் தளங்களில் நில வேறுபாடுகள் காணப்படாமையினால் இயந்திர சூத்திரங்களைப் பயன்படுத்தி கூட்டுத்தாபனத் திட்டத்தின் மூலம் மரங்களைத் தறிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது ஒப்பந்தக்காரருக்கு சாதகமான முறையில் வேலைத்தளங்கள் கஷ்டமாகக் கருதி விலைகள் குறைக்கப்பட்டிருந்தன. அவ்வாறே ஒப்பந்தக்காரரால்

வேலைத்தளம் கடினமானமையால் "மங்சல" விற்பனை விலையைக் குறைக்குமாறு 2009 யூன் 17 ஆந் திகதி கோரப்பட்டிருந்ததுடன் அந்தக் கோரிக்கைக்கு முன்னர் விலைக் குழுவினால் ஒப்பந்தக்காரரின் கோரிக்கையின் அடிப்படையில் 2009 யூன் 16 ஆந் திகதி விலை குறைக்கப்பட்டிருந்தது.

(iv) மரங்களை தரப்படுத்தும் போது நல்ல நிலையிலுள்ள மரக்குற்றிகள் மற்றும் உப தரங்களிலுள்ள மரக்குற்றிகள் என வகைப்படுத்தும் போது நல்ல நிலையில் காணப்படாத சகல மரங்களும் உப நிலையிலுள்ளதாகத் தரப்படுத்தப்பட்டிருந்தது. உதாரணமாக 5 சதவீத பழுதுள்ளதாகக் காணப்பட்ட மரக்குற்றிகள் மற்றும் 95 சதவீத பழுதுள்ளதாகக் காணப்பட்ட மரக்குற்றிகள் ஆகிய இரண்டும் ஒரே விலையின் கீழ் விற்பனை செய்யப்பட்டிருந்தன.

(v) ஆறு சந்தர்ப்பங்களின் போது முதிரை மரக்குற்றிகள் களஞ்சியத்திற்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காது "மங்சல" விற்பனைக்கு அனுப்பப்பட்டிருந்தது.

(vi) இறம்புக்கன் ஓயா செயற்திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்கு வெளியே மரங்களை வெட்டியிருந்ததுடன் ஆரம்பக் கட்டத்தின் போது வெட்டப்பட வேண்டிய எல்லையை விஞ்சி மரங்கள் வெட்டப்பட்டிருந்தமையும் விஷேடமாக மொனராகல மாவட்ட எல்லையை விஞ்சி நீண்ட தூரத்தில் பல்வேறு வகையான மரங்கள் வெட்டப்பட்டிருந்தமையும் நீர்ப்பாசன பொறியியலாளரின் கூற்றுக்களில் உறுதிப்படுத்தப்பட்டது. அம்பாறை மாவட்டச் செயலாளரின் கூற்றின் பிரகாரம் அது "நிருவாக நடைமுறைகளின் போது ஏற்பட்டதாக அல்லாது திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பாரதூரமான குற்றம்" எனவும், சுற்றாடல் அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் 2011 செப்தெம்பர் 17 ஆந் திகதிய 01/01/03/03/27/10 ஆம் இலக்க அறிக்கையின் 21(1) ஆம் பந்தியின் பிரகாரம் "இந்த நீர்த்தேக்கத்திற்கு கீழ் வராத

எல்லையைப் போலவே அகற்றுவதற்கு அனுமதியில்லாத எல்லையில் மருத, முதிரை போன்ற உயர்ந்த பெறுமதியையுடைய மரங்கள் வெட்டி அகற்றப்பட்டிருந்தன. இது வரையிலும் அனுமதி வழங்கப்படாத மொனராகல மாவட்ட எல்லையை விஞ்சியும் வெட்டுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது."

## 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2001 ஆம் ஆண்டில் ரூபா 468,000 தொகையான அடிப்படைச் செலவினத்தைச் செய்து கூட்டுத்தாபனத்தினால் கூட்டுவியாபாரம் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 30,000,000 தொகை கம்பனியொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இது வரையிலும் எவ்வித பிரதிபலனும் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) ஆலோசனைச் சேவைக்காக கூறுவிலை சமர்ப்பித்த நிறுவனங்களிற்கிடையே பொருத்தமான நிறுவனமொன்றைத் தெரிவு செய்யும் போது ஆலோசனைச் சேவை செயற்பாட்டுக் கைநூலில் குறிப்பிடப்பட்ட ஆலோசனைகளைக் கவனத்தில் கொள்ளாமல் குறைந்த விலையில் கேள்வி வழங்கப்படாமையின் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 1,738,000 தொகையான நிதிரீதியான நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 4.4 பதவியணியினர் நிருவாகம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2011 மார்ச் 08 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈ2/58/4/371/1/1 ஆம் இலக்க கடிதத்தின் ஆலோசனைகளுக்கு முரணாக திறைசேரியின் அங்கீகாரமின்றி முகாமைத்துவப் பயிற்சியளிக்கும் பதவிகளுக்காக 26 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர். அவ்வாறே தகைமைகளைப் பூர்த்தி செய்யாத 14 விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அதில் 3 விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப்பரீட்சையின் போது பிழையாக புள்ளி வழங்கப்பட்டு அந்த பதவிகளுக்குச் சேர்க்கப்பட்டிருந்தனர்.

4.6 வாகனப் பயன்பாடு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 9,296,000 தொகை செலவிடப்பட்டு தலைவருக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட ஜீப் வண்டி நான்கு (04) சந்தர்ப்பங்களின் போது விபத்துக்களுக்கு உள்ளாகியிருந்ததுடன் அந்த நான்கு விபத்துக்களிலும் மூன்று விபத்துக்கள் தலைவரால் ஓட்டிச் செல்லப்படும் போது ஏற்பட்டிருந்தன. தலைவரால் வாகனம் ஓட்டும் போது ஏற்பட்ட இரண்டு விபத்துக்களுக்குரிய நட்டம் முறையே ரூபா 60,788 தொகையாகவும் ரூபா 294,276 தொகையாகவும் காணப்பட்டன. எவ்வாறாயினும் அந்த நட்டத்தை நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இறுதியாக 2013 சனவரி 20 ஆந் திகதி வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்தினால் இந்த வாகனம் அதிகமான சேதத்திற்கு உள்ளாகியிருந்த போதிலும் அதனால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் 2014 ஆகஸ்ட் இறுதி வரையிலும் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 கூட்டிணைந்த திட்டமும் உபாயத்திட்டங்களும்

பின்வரும் அதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈபீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1.1 ஆம் பிரிவிற்கு முரணாக 2013 – 2017 இற்கான கூட்டிணைந்த திட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2013 திசெம்பர் 17 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 - 2017 காலப்பகுதியை உள்ளடக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நோக்கம் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு மீளாய்வாண்டின் போது பின்பற்றப்பட வேண்டிய உபாய வழிகள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கூட்டிணைந்த திட்டம் தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டிற்கான திட்டமிடப்பட்ட உபாய வழிகளை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போத அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 50 நிகழ்ச்சித்திட்டங்களில் 2013 ஆம் ஆண்டின் போது அடையப்பட்ட செயலாற்றல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1957 இன் 49 ஆம் இலக்க தொழில்நுட்ப கூட்டுத்தாபன அதிகாரச் சட்டம் மற்றும் 2011 யூன் 26 ஆந் திகதிய 1190/7 ஆம் இலக்க மற்றும் 1982 பெப்ரவரி 05 ஆந் திகதிய 178/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கூட்டுத்தாபன செயற்பொறுப்புக்களை விரிவுபடுத்தலின் கீழ் காண்பிக்கப்பட்ட பின்வரும் நோக்கங்கள் கூட்டிணைந்த திட்டத்தின் நோக்கங்களுக்குள் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) விவசாய உற்பத்தியை ஆரம்பித்தல்.

(ii) மரங்களின் துணைப் பொருட்களின் பூர்த்தி மற்றும் அரைப்பூர்த்தி உற்பத்திகளின் ஏற்றுமதி.

(iii) பிரம்புகளின் ஏற்றுமதி

## 5.2 கொள்வனவுத் திட்டம்

தயாரிக்கப்பட்டிருந்த கொள்வனவுத் திட்டத்தின் தகவல்கள், பாதிடப்பட்ட தகவல்களுடன் வேறுபாடு காணப்பட்ட போதும் கொள்வனவுத் திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு நாளாதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான பெறுமதிகளுக்கிடையே 4 சதவீதம் தொடக்கம் 251 சதவீதம் வரையிலான அளவில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 5.4 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பங்களாவத்த வெபல்டன் வணிக நிலக் கூறுகளில் அனுமதியற்ற வெட்டுதல் தொடர்பாக ஒப்பந்தக்காரர் மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்கள் தொடர்பாக எடுக்க வேண்டிய செயற்பாடுகளை சிபார்சு செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஒன்றிணைந்த குழுவின் அறிக்கை பெறப்பட்ட பின்னர் ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக கூட்டுத்தாபன தலைவரினால் 2013 யூன் 28 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அது தொடர்பாக எவ்வித செயல்நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீடு
(ஆ) இருப்புக் கட்டுப்பாடு
(இ) நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்
(உ) கொள்வனவுகள்
(ஊ) கணக்கீடு
(எ) மனித வள முகாமைத்துவம்

ஒப்பம்:- டபிள்யு.பீ.சீ.விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி



# வருடாந்த கணக்குகள

| திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கானது | குறிப்பு | 2013 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|---|
| மொத்த விற்பனை | 2 | 2,893,651,289 | 3,269,514,359 |
| விற்பனை ஆகுசெலவு | 3 | (1,696,133,479) | (1,723,407,642) |
| செயற்பாட்டுக்கான மொத்த இலாபம் | | 1,197,517,810 | 1,546,106,717 |
| வேறு வருமானங்கள் | 6 | | |
| தொழிற்படு | 6.2 | 61,498,711 | 76,187,627 |
| தொழிற்பாடற்ற | 6.1 | 258,397,070 | 217,687,637 |
| மொத்த தேறிய வருமானம் | | 1,517,413,591 | 1,839,981,981 |
| விற்பனை மற்றும் விநியோகித்தல் செலவினங்கள் | 4 | (483,276,150) | (454,741,376) |
| நிர்வாகச் செலவினங்கள் | 5 | (651,800,681) | (583,559,297) |
| திறைசேரி வரியின் முன் தேறிய இலாபம் | | 382,336,761 | 801,681,308 |
| திறைசேரிக்கு செலுத்திய வரிகள் | | (50,000,000) | (600,000,000) |
| திறைசேரி வரியின் பின் இலாபம் | | 332,336,761 | 201,681,308 |
| வருடத்திற்கான வருமான வரி | 7 | (150,222,702) | (37,029,955) |
| வருமான வரியின் பின் இலாபம் | | 182,114,059 | 164,651,354 |
| வேறு விபரமான வருமானங்கள் | | - | - |
| வருடத்திற்கான மொத்த விபாரமான வருமானம | | **182,114,059** | **164,651,354** |

# விபரமான வருமானக் கூற்று

| திசெம்பர் 31ஆந் திகதியில | குறிப்பு | 2013 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதி, இயந்திரங்கள் | 8 | 906,902,528 | 708,405,958 |
| அருவச் சொத்துக்கள் | 9 | 2,237,142 | 2,839,450 |
| உயிரியல் சார் சொத்துக்கள் | | 3,184,890 | - |
| திறைசேரி வைப்புக்கள் | | 2,966,000 | 2,966,000 |
| ஊழியர் பிணை வைப்புக்கள் | | 44,231,056 | 41,134,306 |
| முதலீடுகள் | | 567,085,340 | 520,071,129 |
| முன்செலுத்தப்பட்ட ஊழியர் நன்மைகள் | | 46,927,158 | 48,204,913 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 7.2 | 33,396,804 | 51,736,743 |
| நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலைகள | | 51,603,590 | 104,521,423 |
| மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள் | | 1,658,534,509 | 1,479,879,922 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| இருப்புக்கள் பதிவு | 11 | 988,883,042 | 770,970,524 |
| வியாபார மற்றும் வேறு கடன்பட்டோர் | 12 | 890,708,037 | 1,138,101,907 |
| அறவிடக்கூடிய வருமான வரி | 17 | - | 29,473,789 |
| நிலையான வைப்புக்களில் முதலீடு | 10.2 | 1,203,491,399 | 865,105,783 |
| பணம்.்.வங்கி மீதி | 13 | 70,694,647 | 125,532,889 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | 3,153,777,126 | 2,929,184,893 |
| மொத்த சொத்துக்கள் | | **4,812,311,635** | **4,409,064,815** |
| **உரிமைப்பங்கும் பொறுப்புக்களும** | | | |
| உரிமைப்பங்கு மற்றும் ஒதுக்குகள் | | | |
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | | 75,000,000 | 75,000,000 |
| அளிக்கப்பட்ட மூலதனம் | 14 | 41,503,668 | 41,503,668 |
| வருவாய் ஒதுக்கீடு | | 3,110,175,859 | 2,935,644,568 |
| | | 3,151,679,527 | 2,977,148,236 |
| ஊழியர் கடன் சுழல் நிதியம் | 15 | 225,543,133 | 218,784,628 |
| மொத்த உரிமைப்பங்கு | | 3,377,222,660 | 3,195,932,864 |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | | | |
| ஓய்வூதிய பணிக்கொடை நிதியம் | 16 | 340,599,947 | 367,895,815 |
| ஊழியர் பிணை வைப்புக்கள் | | 44,231,056 | 41,134,306 |
| மொத்த நடைமுறையற்ற பொறுப்புக்கள் | | 384,831,003 | 409,030,121 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| வருமான வரி | 17 | 88,581,787 | - |
| கடன்வழங்குவோர் மற்றும் திரண்ட செலவு | 18 | 961,676,185 | 804,101,830 |
| மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் | | 1,050,257,972 | 804,101,830 |
| மொத்த பொறுப்புக்கள் | | **1,435,088,975** | **1,213,131,951** |
| மொத்த உரிமைப்பங்கும் பொறுப்புக்களும் | | **4,812,311,635** | **4,409,064,815** |

அரசாங்க மரக கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்பான இக்கூற்று 1971 இல 38ஐக் கொண்ட நிதிச் சட்டத்தின் பிரமாணங்களின் பரகாரம் முன்வைக்கப்படடுள்ளது.

தலைவர் (பணிப்பாளர் சபை சார்பாக)
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

பொது முகாமையாளர
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம

திகதி : 2014-07-07

# உரிமைப்பங்கின் மாற்றங்கள் பற்றிய கூற்று

| | பங்களித்த மூலதனம் | ஊழியர் கடன் சுழலும் நிதியம | தடுத்து வைத்த இலாபம் | மொத்தம |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2012 ஜனவரி 01ஆந் திகதியில் மீதி | 41,503,668 | 208,105,464 | 2,770,993,214 | 3,020,602,346 |
| வருடத்தினுள் செய்யப்பட்ட மாற்றங்கள் | - | 915,971 | - | 915,971 |
| வருடத்திற்கான மொத்த விபரமான வருமானம் | | | 164,651,354 | 164,651,354 |
| வருடத்திற்கான ஊழியர் கடன் வட்டி | - | 9,763,193 | - | 9,763,193 |
| 2013 ஜனவரி 01ஆந் திகதியில் மீதி | 41,503,668 | 218,784,628 | 2,935,644,568 | 3,195,932,864 |
| வருடத்தினுள் செய்யப்பட்ட மாற்றங்கள் | - | (824,263) | - | (824,263) |
| வருடத்திற்கான மொத்த விபரமான வருமானம் | - | | 182,114,059 | 182,114,059 |
| வருடத்திற்கான ஊழியர் கடன் வட்டி | - | 7,582,768 | (7,582,768) | - |
| 2013 திசெம்பர் 31ஆந் திகதியில் மீதி | 41,503,668 | 225,543,133 | 3,110,175,859 | 3,377,222,660 |

# பணப்பாய்ச்சல் கூற்று

| டிசம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கானது | 2013 | 2012 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் பணப்பாய்ச்சல | | |
| வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்ற தொகை | 3,100,220,273 | 3,002,183,743 |
| வழங்குனர்களுக்கும் ஊழியர்களுக்கும் செலுத்திய தொகை | (2,692,082,754) | (2,480,260,536) |
| செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தொகை | 408,137,519 | 521,923,207 |
| வருமான வரி | (13,827,187) | (216,105,005) |
| திறைசேரிக்கு செலுத்திய விசேட வரி | (50,000,000) | (600,000,000) |
| செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் தேறிய பணப்பாய்ச்சல் | **344,310,332** | **(294,181,798)** |
| முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் பணப்பாய்ச்சல் | | |
| நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல் | (329,685,077) | (162,337,308) |
| உயிரியல் சொத்துக்களின் அபிவிருத்தி | (3,184,890) | - |
| முதலீடுகள் | (385,399,827) | 349,222,033 |
| முதலீடுகளிலிருந்து கிடைத்த வருமானம் | 247,383,991 | 132,563,949 |
| சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பெற்ற தொகை | 9,112,038 | 4,751,835 |
| நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் | 52,917,833 | (45,911,084) |
| ஊழியர் கடன் சுழல் நிதியம் | 9,707,359 | 9,763,193 |
| முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் தேறிய பணப்பாய்ச்சல் | **(399,148,574)** | **288,052,618** |
| நிதி நடவடிக்கைகள் மூலம் பணப்பாய்ச்சல் | | |
| பணம் மற்றும் அதற்கு சமமான சொத்துக்களின் தேறிய பெறுமானம் அதிகரித்தல்) | (54,838,242) | (6,129,180) |
| வருட ஆரம்பத்தில் பணம் மற்றும் அதற்கு சமமான சொத்துக்கள் - குறிப்பு 13 | 125,532,889 | 131,662,069 |
| வருட இறுதியில் பணம் மற்றும் அதற்கு சமமான சொத்துக்கள் - குறிப்பு 13 | **70,694,647** | **125,532,889** |

# அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
## கணக்குகளுக்கான குறிப்புகள்
2013 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடையும் வருடத்திற்கானது

01. கணக்கியற் கொள்கைகள்

1.1 விபரம் அளிக்கும் நிறுவனம்
1957 இல 49ஐக் கொண்ட அரசாங்கக் கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ், 1968 ஏப்பிரல் மாதம் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஒரு கூட்டுத்தாபனமாக தாபிக்கப்பட்டது.

1.1.1 நிதிக் கூற்றுக்களை அறிவிப்பதற்கு அனுமதி பெற்ற தினம் 2014, யூலை மாதம் 07 ஆந் திகதி பணிப்பாளர் சபையில், தீர்மானிக்கப்பட்ட பணிப்பாளர் சபையின் பத்திரத்தின் படி 2013 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

1.1.2 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல் ஆகிய பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உரியது.

1.1.3 ஊழியர் எண்ணிக்கை
2013 திசெம்பர் 31ஆந் திகதியன்று கூட்டுத்தாபனத்தின் ஊழியர் எண்ணிக்கை 2139 ஆகும். (2012ஆம் ஆண்டில் 2187 ஆகும்)

1.2 முன்வைத்தற் அடிப்படை

1.2.1 இசைவு தொடர்பான கூற்று
இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள விதந்துரைக்கப்பட்ட சட்டவிதிகள் மற்றும் இலங்கை கணக்கியற் நியமங்கள் (இலங்கை கணக்கியற் நியமங்கள் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள்) ஆகியவற்றுக்கு இணங்க, கூட்டுத்தாபனத்தின் 2013 திசெம்பர் 31ஆந் திகதியன்று மற்றும் அக்காலப் பகுதியில் முடிவடையும் வருடத்திற்கான நிதி நிலைமைக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, உரிமைப்பங்கின் மாற்றங்கள் பற்றிய கூற்று, பணப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றுடக் கணக்குக் குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.2.2 மதிப்பீட்டு அடிப்படை
சரித்திர ஆகுசெலவு மரபை அடிப்படையாகக் கொண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.2.3 பாவனையிலுள்ள மற்றும் நிதிக் கூற்றுக்களை முன்வைப்பதற்கான பண அலகு
